Registered as a news paper.

பக்கங்கள்: பத்து

விலை: ரூபா 6.00

நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

உலகெங்குமுள்ள உங்கள் உறவினர்களுடன்
INTER NET
BROWSING CENTRE
ஸ்ரீ முருகன் தொலைத்தொடர்பகம்
இலங்கை முழுவதும் 24 மணிநேரத்தில்
துரித தபால்/பொதிகள் சேவை.
SRI MURUGAN
TELE COMMUNICATION & AGENCY POST OFFICE
303, K.K.S. Road, Jaffna. T.P. 021-2222670, 2223588
Fax - 2223214, Email-del - smskr@eureka.lk
(ஸ்ரீ-888)

மலர் : 01 திருவள்ளுவர் ஆண்டு: 2034 வைகாசி 02 ஆம் நாள், ஹிஜ்ரி 1425 ர.அவ்வல் 13 (16.05.2003) வெள்ளிக்கிழமை இதழ்: 224

# பிரபா-நோர்வே குழு இரண்டு மணிநேரம் பேச்சு



பீற்றர்ஸனுக்கு கைலாகு கொடுத்து வரவேற்கிறார் தலைவர்.



பிரபா - பீற்றர்ஸனுக்கு நினைவுப் பரிசு வழங்குகிறார்.

நேற்று கிளிநொச்சி வந்த நோர்வே உயர்மட்டக்குழுவினர், மதியம் 12 மணியளவில் தலைவர் பிரபாகரனைச் சந்தித்துப் பேச்சுக்களை நடத்தினர். இந்தச் சந்திப்பின்போது, தலைவர் பிரபாகரனுடன் சட்ட ஆலோசகர் வி.உருத்திரகுமாரன், அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன், கேணல் கருணா, கேணல் பதுமன் ஆகியோரும் உடனிருந்தனர். சந்திப்பு பிற்பகல் 2 மணிவரை நீடித்தது. சந்திப்பின்போது தலைவரால் நோர்வே வெளிவிவகார அமைச்சர் ஜான் பீற்றர்சனுக்கு நினைவுப்பரிசு ஒன்றும் வழங்கப்பட்டது.

# அதிகாரக் கட்டமைப்பு ஏதுமில்லாது

# ரோக்கியோ செல்வதில் பயனில்லை!



## நோர்வேக் குழுவிடம் புலிகள் தெரிவிப்பு

(கிளிநொச்சி)

"சர்வதேச சமூகத்திடம் நாம் உதவிகோரிச் செல்லும்போது, எமக்கு தாயகப் பகுதியில் நிர்வாக அதிகாரமுள்ள ஒரு கட்டமைப்பை நிறுவாமல், அதற்கான அதிகாரங்களைப் பெற்றுக்கொள்ளாமல் செல்லமுடியாது. சிறான் அமைப் பிற்குப் போதிய அதிகாரம் இன்றிய நிலையில், நாம் ரோக்கியோ செல்வது பயனற்ற ஒன்று. அரசுக்கு நிதி சேகரித்துக் கொடுப்பது எமது பணியல்ல" என்று விடுதலைப் புலிகள் நேற்று நோர்வேக் குழுவிடம் தெரிவித்தனர்.

தலைவர் பிரபாகரனுக்கும், பின்போது, செய்தியாளர்கள் எழுப் வீர்களா?



புலிகள் தரப்பில், தலைவருடன் பேச்சுக்களில் கலந்துகொண்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் தமிழ்ச்செல்வன், சட்ட ஆலோசகர் உருத்திரகுமாரன், கேணல் கருணா, கேணல் பதுமன்.



நோர்வே தரப்பில் கலந்துகொண்ட - தூதரகப் பேச்சாளர் கர்ஸ்ரன் கிளெப்ஸ்விக், பிரதி வெளியுறவு அமைச்சர் ஹெல்கிசன், வெளியுறவு அமைச்சர் ஜான் பீற்றர்ஸன், தூதுவர் பிரட்ஸ்கர், அரசியல் ஆலோசகர் மாரிட் பேர்க்கர், இரண்டாவது செயலாளர் தோமஸ் ஸ்ராங்லான்ட்.

தலைவர் பிரபாகரனுக்கும், நோர்வே உயர்மட்டக் குழுவிற்கும் இடையில் நேற்று நடைபெற்ற பேச்சுக்கள் தொடர்பாக, அரசியற்துறைப் பொறுப்பாளர் தமிழ்ச்செல்வன், பின்னர் செய்தியாளர்களிடையே பேசும்போது மேற்கண்ட தகவலை வெளியிட்டார்.

இச்செய்தியாளர்கள் சந்திப்பின்போது, செய்தியாளர்கள் எழுப்பிய கேள்விகளையும், அதற்கு தமிழ்ச்செல்வன் அளித்த பதில்களையும் முழுமையாகக் கேள்வி - பதில் வடிவில் தருகின்றோம்.

*கேள்வி :* இன்று நடைபெற்ற பேச்சுவார்த்தையில் ஆராயப்பட்ட முக்கிய விடயங்கள் பற்றிக் கூறுவீர்களா?

*பதில்:* நோர்வே வெளிவிவகார அமைச்சருக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனுக்கும் உத்தியோகபூர்வ சந்திப்பு நடைபெற்றது. பல ஆக்கபூர்வமான விடயங்கள் கலந்துரை

(10 ஆம் பக்கம் பார்க்க)

## பிரதமருடன் நோர்வே அமைச்சர் சந்திப்பு

கிளிநொச்சியில் தலைவர் பிரபாகரனுடனான சந்திப்பை முடித்துக் கொண்டு, கொழும்பு திரும்பிய நோர்வே வெளியுறவு அமைச்சர் ஜான் பீற்றர்ஸனும், பிரதி வெளியுறவு அமைச்சர் விதார் ஹெல்கிசனும் - உடனடியாக நேற்று மாலையே பிரதமர் ரணிலைச் சந்தித்துப் பேசியுள்ளனர். இச்சந்திப்பில், புலிகள் தரப்பு நிலைப்பாட்டை நோர்வேக் குழுவினர், பிரதமரிடம் எடுத்துக்கூறினர்.

இவர்களிடையேயான இச்சந்திப்பு - நேற்றுமாலை 6 மணிமுதல் 7.30 மணிவரை நீடித்தது.

பிரதமர் - நோர்வே அமைச்சர்களிடையேயான சந்திப்பின் விபரங்கள் வெளியிடப்படவில்லை.

இதேவேளை - நோர்வே அமைச்சர் பீற்றர்ஸன், இன்று அதிகாலை நோர்வேக்குப் புறப்பட்டுச் செல்லவுள்ளார். எனினும், பிரதி அமைச்சர் ஹெல்கிசன் மூன்று தினங்களுக்கு இலங்கையில் தங்கியிருப்பார்.

# 'சார்ஸ்' நோயினால் யுவதி இறக்கவில்லை

## சுகாதார சேவைகள் பணிப்பாளர் லியனகே



நேற்றுமுன்தினம், யாழ்.ஆஸ்பத்திரியில் மரணமான யுவதிக்கு, 'சார்ஸ்' நோய் இருந்ததாக வெளியான தகவல்கள் தவறானவை. 'சார்ஸ்' நோயினால் இவர் மரணிக்கவில்லை என்பதை நாம் எமது ஆவண ஆய்வுகள் மூலம் அறிந்துள்ளோம்.

- இவ்வாறு கொழும்பிலிருந்து யாழ்ப்பாணத்திற்கு, 'சார்ஸ் நோய் பற்றி ஆராயவந்த சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் அத்துல சுகந்த லியனகே தெரிவித்தார். 'சார்ஸ்' சந்தேக மரணம் குறித்து, அவர் எமது செய்தியாளருக்கு விளக்கியபோதே இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் - யுவதியின் உறவினர்கள், ஒன்றரை மாதத்துக்கு முன்பு கனடாவிலிருந்து வந்திருக்கின்றனர். கனடாவில் இப்போதும் அவர்கள் நல்ல தேக ஆரோக்கியத்துடன் இருக்கிறார்கள். இந்த நிலைமைகளை ஆராய்ந்த பின்பு இறந்தவருக்கு 'சார்ஸ்' நோய் இல்லையென்பதைத் தீர்மானித்துள்ளோம்.

மரணமானவரின் உடலுறுப்புக்களை கொழும்புக்கு அனுப்பியிருக்கிறோம். அவருக்கு என்ன நோய் என்பதைக் கண்டுபிடிக்க வேண்டியது அவசியம். 'சார்ஸ்' நோய் என்றால் - வைத்தியசாலையில்

(10 ஆம் பக்கம் பார்க்க)

# பஞ்சாப் ரயிலில் தீ விபத்து; 37 பயணிகள் கருகி மரணம்!



(புதுடெல்கி)

இந்திய பஞ்சாப் மாநிலத்தில் கடுகதி ரயில் ஒன்றில் ஏற்பட்ட தீயினால், 37 பேர் பலியாகியுள்ளனர். மும்பாயிலிருந்து அம்ரித்ஸர் நகர் நோக்கிச்சென்ற ரயிலின் மூன்று பயணிகள் பெட்டிகளிகளில் தீ பரவியதாகக் கூறப்படுகிறது.

இதுவரை 37 சடலங்கள் மீட்கப்பட்டுள்ளன. இறந்தவர்களில் அனேகமானோர் பெண்களும் குழந்தைகளுமாவார். சடலங்கள் அடையாளம் காணமுடியாத அளவு எரியுண்டுள்ளன. தீ பற்றியதற்கான காரணம் இதுவரை தெரியவில்லை எனினும், தீப் பற்றக்கூடிய பொருட்கள் எதனையும் பயணிகள் எடுத்துச்சென்றமையால் இக்கொடூரம் நிகழ்ந்திருக்கலாம் என ரயில்வே அதிகாரிகள் தெரிவித்தனர்.

விபத்துக்குள்ளான 'புரொண்டியர் மெயில்' எனப்படும் இக்கடுகதி ரயில்சேவை, இந்தியாவின் பெருமைக்குரியதும் பழமையானதுமான ரயில் சேவையாகும்.

விபத்து நடைபெற்றபோது அநேகமான பயணிகள் உறக்கத்திலிருந்ததாகவும், தீயின் வெப்பத்தை உணர்ந்து வெளியே தப்பியோட முனைந்தபோது - வெப்பத்தினால் கதவுகள் திறக்கமுடியாதபடி இறுகியிருந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது.



ஈராக்கின் ஹில்லா நகரில், மூவாயிரம் பேர் கொன்று புதைக்கப்பட்டிருப்பதாக நம்பப்படும் புதைகுழியிலிருந்து, மனித உடல்களின் எச்சங்கள் திரட்டப்படுகின்றன.

## யூரோவுக்கு பிரிட்டிஷ் மறுப்பு!

(லண்டன்)

யூரோ நாணயத்திட்டத்தில் பிரிட்டன் தற்போதைக்கு இணைந்து கொள்ளும் யோசனை இல்லையென பிரிட்டிஷ் அரசு அறிவித்துள்ளது. இதுதொடர்பான உத்தியோகபூர்வ அறிக்கை அடுத்த வாரமளவில் வெளிவரலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது.

## 'ஷெல்' பெற்றோல் நிலைகள் மீது பாகிஸ்தானில் குண்டுத் தாக்குதல்!



பாகிஸ்தானின் கராச்சி நகரிலுள்ள 'ஷெல்' (Shell) பெற்றோல் நிலையங்களில் நடைபெற்ற தொடரான குண்டுத் தாக்குதல்களினால் பெற்றோல் நிலையங்களுக்கு சேதம் ஏற்பட்டுள்ளது. எனினும், உயிரிழப்புகள் ஏற்படவில்லை. தாக்குதல் நடத்தியவர்களும் அடையாளங்காணப்படவில்லை. கடந்த புதன் இரவு மோட்டார் சைக்கிள்களில் ஏராளமானவர்கள் இப்பகுதிகளில் நடமாடியதால், இவர்களே இந்த சிறியரகக் குண்டுகளை பெற்றோல் நிலையங்களில் பொருத்தியிருக்கலாம் என நம்பப்படுகிறது. 'ஷெல்' பெற்றோலிய நிறுவனம் பிரிட்டன் - டச்சு - அமெரிக்க கூட்டு நிறுவனம் என்பதால் அது தாக்கப்பட்டிருக்கலாம் எனப் பொலிஸார் கருதுகின்றனர்.

## மேலும் தாக்குதல்கள் குறித்து அமெரிக்க அரசு எச்சரிக்கை!



சவூதி அரேபியாவில் அமெரிக்க இலக்குகள் மீதான தாக்குதலைத் தொடர்ந்து, தென்கிழக்காசியா மற்றும் கிழக்கு ஆபிரிக்கா பகுதிகளிலும் அமெரிக்க இலக்குகள் மீது பயங்கரவாதத் தாக்குதல்கள் நடைபெறலாம் என அமெரிக்கா எச்சரித்துள்ளது.

இதேசமயம், சவூதி தலைநகர் ரியாத்தில் நடைபெற்ற தற்கொலைத் தாக்குதல்களில், இறந்தோரின் தொகை 34 ஆக உயர்ந்துள்ளது. இவர்களில் ஏழு பேர் அமெரிக்கர்கள் எனத் தெரிவிக்கப்படுகிறது.

## சகாராவில் கடத்தப்பட்ட மற்றைய வெளிநாட்டவர் கதி தெரியவரவில்லையாம்

(சகாரா)

சகாரா பாலைவனத்தில் காணாமற்போன 34 ஐரோப்பிய உல்லாசப் பயணிகளில் 17 பேர் ஏற்கனவே அல்ஜீரியப்படைகளால் கடந்த செவ்வாயன்று மீட்கப்பட்டபோதிலும், மேலும் 15 பேரின் நிலைமை குறித்து இன்னமும் எவ்வித தகவலும் கிடைக்கவில்லை.

இவர்களைத் தமது படைகள் தேடிவருவதாக அல்ஜீரிய உள்துறை அமைச்சர் தெரிவித்தார். சகாரா பாலைவனத்தில் இயங்கும் அல்ஜீரிய இஸ்லாமியத் தீவிரவாதிகளிடமிருந்து அல்ஜீரிய அதிரடிப்படை மீட்ட 17 உல்லாசப் பயணிகளும் நேற்று விமானம் மூலம் அல்ஜீரியாவைவிட்டுப் புறப்பட்டனர்.

ஒரு தொகுதி வெளிநாட்டவர்களை அல்ஜீரியப் படைகள் மீட்ட தகவல்களை செய்தி நிறுவனங்கள் அவசரப்பட்டு வெளியிட்டுள்ளதால், மற்றைய தொகுதி வெளிநாட்டவர்களை மீட்பதில் சிரமங்கள் ஏற்படும் என அல்ஜீரிய வெளியுறவு அமைச்சர் கண்டனம் தெரிவித்துள்ளார். ஒரு தொகுதியினர் மீட்கப்பட்ட தகவல் அறிந்தால் - இரண்டாவது தொகுதி வெளிநாட்டவர்களை தீவிரவாதிகள் பழிவாங்கலாம் என அவர் சுட்டிக்காட்டினார். இந்த வெளிநாட்டவர்கள் பேச்சுவார்த்தைகள் மூலமல்லாது, படை நடவடிக்கை மூலமே மீட்கப்பட்டுள்ளதால், எஞ்சியுள்ள பணயக் கைதிகள் குறித்து அஞ்சவேண்டிய நிலையிலேயே உள்ளோம் என ஐரோப்பியத் தூதுவர் ஒருவர் தெரிவித்தார்.

கடந்த பெப்ரவரியில் சகாராப் பாலைவனத்தை வழிகாட்டிகளின் உதவியின்றி, 34 வெளிநாட்டு உல்லாசப் பயணிகள் கடக்க முயன்றபோது, அவர்கள் இஸ்லாமியத் தீவிரவாதிகளால் கைதுசெய்யப்பட்டது தெரிந்ததே.




அல்ஜீரியப் பத்திரிகையில் கடத்தல் செய்தி




சீனத் தலைநகர் பீகிங்கில் - சார்ஸ் நோய்க் கட்டுப்பாட்டில் துணிச்சலாக ஈடுபடும் மருத்துவத் தாதிகளுக்கு, அந்நாட்டரசு - நன்கொடைப் பணம் வழங்குகிறது. இங்கு - அப்பணத்தை Cheque வடிவில் பெற்றுவரும் மருத்துவத் தாதிகளைப் படத்தில் காணலாம்.

## ஜப்பானிய படைக்கு கூடுதல் அதிகாரம்!

ஜப்பானிய இராணுவத்தை மேலும் பலப்படுத்துவதற்கான அனு

உலகவலம்

மதியை வழங்கும் சட்டவரைபுகளை, ஜப்பானியப் நாடாளுமன்றத்தின் கீழ்சபை அங்கீகரித்துள்ளது. இதன்மூலம் நாட்டின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்படும்போது, ஜப்பானிய இராணுவத்தைப் படை நடவடிக்கையில் ஈடுபடுத்த அரசுக்கு கூடுதல் அதிகாரம் கிடைக்கும்.

இரண்டாம் உலகப்போரின் பின்னர் - ஜப்பானிய இராணுவம் அமெரிக்கப் படைகளின் மறைமுகக் கட்டுப்பாட்டிலேயே வைக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

நிறைஞ்சனாஸ் சங்கானை

அஜித், சிம்ரன், கவுண்டமணி நடித்த

அவள் வருவாளா

காட்சி நேரம் 11.00, 2.45, 6.00 (பு.நே)
வெள்ளி, சனி, ஞாயிறு (இரவு 8.45)

HANNIBAL (சி-882)

ராஜா யாழ்ப்பாணம்.

இலங்கையிலும், இந்தியாவிலும் ஒரே தின வெளியீடு
இளைய தளபதி விஜய், மீராஜஸ்மின் நடித்த

புதிய கீதை



10.30, 2.30, 6.30, 9.30 (சி-883)

## கண்ணீர் அஞ்சலி

யாழ். பல்கலைக்கழக பூப்பந்தாட்ட அணியின் உப தலைவர்

### கிருஸ்ணபிள்ளை சுரேந்திரன்

அவர்களின் அகால மரணத்தையிட்டு அவரது பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக்கொள்வதுடன், அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பூப்பந்தாட்ட அணி,
யாழ். பல்கலைக்கழகம்

(350)

### யாழ்.வைத்தியசாலையில் உயிரிழந்த பெண்ணுக்கு

# சார்ஸ் நோய் தொற்றியது உறுதியில்லை; நிமோனியாவினாலும் இறந்திருக்கலாம்!

### சுகாதார அதிகாரிகள் கருத்து

(கொழும்பு)

**யாழ்.போதனா வைத்தியசாலையில் உயிரிழந்த பெண், நிமோனியா காய்ச்சலின் பாதிப்பினாலேயே உயிரிழந்திருக்கலாம் என்றும், அந்தப் பெண்ணுக்குச் சார்ஸ் நோய் தொற்றியிருந்தது உறுதி செய்யப்படவில்லை என்றும் -**

**இதனால், பொதுமக்கள் தேவையற்ற பயப்பீதி கொள்ளத் தேவையில்லை என்று கொழும்பிலுள்ள சுகாதார அமைச்சு அதிகாரிகள் தெரிவித்தனர்.**

இது தொடர்பாகத் தொற்று நோயியல் நிபுணரான டாக்டர் ரி.ஏ.குணதிலக கருத்து வெளியிட்டபோது,

கடந்த வருடமும் இதேபோன்று - வழமையிலும் பார்க்க வித்தியாசமான நிமோனியாக் காய்ச்சலினால் பத்துப்பேர் மரணமாகியிருந்தனர். யாழ்.போதனா வைத்தியசாலையில் உயிரிழந்த நோயாளியும் இதே நோய் காரணமாகவே இறந்திருக்கலாம் என்று தெரிவித்தார்.

மருத்துவ ஆராய்ச்சி நிறுவனப் பணிப்பாளர் டாக்டர் லூலு ரஷீத் இது தொடர்பாகத் தெரிவித்த போது -

யாழ்ப்பாணத்தில் உயிரிழந்த நோயாளியின் மாதிரிகள் இன்னமும் கிடைக்கவில்லை. இவை கிடைத்தாலே எவ்வாறு உயிரிழப்பு ஏற்பட்டதென்று தீர்மானகரமாகக் கூறமுடியும் எனக் குறிப்பிட்டார்.

இதேவேளை, சுகாதார சேவைகள் பணிப்பாளர் அத்துல சுகந்தலியனகே நிலைமையை நேரில் ஆராய்வதற்காக யாழ்ப்பாணம் வந்துள்ளார்.

பெரும்பாலும் இன்று, பெண்ணின் மரணத்துக்குக் காரணம் என்ன என்பது பற்றிய முடிவுகள் கிடைக்கலாம் என்று தாம் நம்புவதாகச் சுகாதார அமைச்சு அதிகாரிகள் தெரிவித்தனர்.


இதேவேளை - தமிழகத்திலும் இரண்டு சார்ஸ் நோயாளிகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளனர். இதனால், தமிழகத்திலிருந்து நாடு திரும்பும் அகதிகள் மூலம் சார்ஸ் நோய் பாதிப்பு ஏற்படுமா என்று சுகாதார அதிகாரிகள் ஆராய்ந்து வருகின்றனர்.

தமிழகத்திலிருந்து நாடு திரும்பும் அகதிகளின் படகுகள் சோதனையிடப்படுவதில்லை. இதனால், இவர்களில் சார்ஸ் நோய்க்காவிகளும் இருக்கலாம் என்றும் சுகாதார அதிகாரிகள் தெரிவித்தனர்.

கனடாவிலிருந்து பெருமளவான இலங்கையர்கள் இங்கு வந்து செல்கின்றனர். கனடாவில் வசிப்பவர்களுக்குச் சார்ஸ் நோய் பாதிப்பு ஏற்படுவதற்குச் சந்தர்ப்பங்கள் அதிகமென்றும், கனடாவிலிருந்து வருவோரால் இந்நோய் பரவச் சந்தர்ப்பங்கள் இருப்பதாகவும் சுகாதார அதிகாரிகள் மேலும் தெரிவித்தனர்.

இதேவேளை - இன்றுவரை இலங்கையில் சார்ஸ் நோயாளி ஒருவரும் இனங்காணப்படவில்லை. உலகளாவியரீதியிலும் சார்ஸ் நோயின் பாதிப்புகள் குறைவடைந்து வருகின்றன.

உலகம் முழுவதிலும் 7548 பேர் சார்ஸ் நோயினால் பாதிக்கப்பட்டனர். இவர்களில் 3298 பேர் பூரண சுகமடைந்துள்ளனர். 573 பேர் மட்டுமே இந்த நோயால் இறந்துள்ளனர். தற்போது சார்ஸ் நோய் கட்டுப்பாட்டுக்குள் வந்து கொண்டிருப்பதாகவும் அதிகாரிகள் தெரிவித்தனர்.








அம்பாறை மாவட்ட தமிழ் - முஸ்லிம் பாடசாலைகளின் அபிவிருத்தி தொடர்பாக- காரைதீவு சண்முக வித்தியாலயத்தில் இடம்பெற்ற கலந்துரையாடலில் பங்குபற்றிய மட்டு - அம்பாறை சிறப்புத் தளபதி ரமேஷ், அம்பாறை மாவட்டச் சிறப்புத் தளபதி ஸ்ரான்லி, அம்பாறை மாவட்ட கொமாண்டோத் தளபதி ஜனார்த்தனன், அம்பாறை நிர்வாகசேவைப் பொறுப்பாளர் நிவராஜ் ஆகியோர் அகவணக்கம் செலுத்துவதை முதற்படத்திலும், சிறப்புத் தளபதி ரமேஷ் உரையாற்றுவதை இரண்டாவது படத்திலும், கூட்டத்தில் கலந்துகொண்டவர்களை மூன்றாவது படத்திலும் காணலாம்.

*(படங்கள் - சலீம்)*

## போட்டிகளில் பங்கேற்காத கழகங்களின் பதிவுகளை ரத்துச் செய்யத் தீர்மானம்!

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண மாவட்டத்தில் கடந்த இரண்டு வருடங்களுக்கு மேலாக, தொடர்ச்சியாகப் பிரதேச விளையாட்டுப் போட்டிகளில் பங்குபற்றாத விளையாட்டுக்கழகங்களின் பதிவுகள் ரத்துச் செய்யப்படவுள்ளதாக யாழ்ப்பாண மாவட்ட விளையாட்டு உத்தியோகத்தர் திருமதி ஏ.எவ்.ஜே.ரூபசிங்கம் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில், யாழ்ப்பாண மாவட்ட பிரதேச செயலகங்களில் பல விளையாட்டுக் கழகங்கள் பதிவுகளைச் செய்துகொண்டதுடன், தமது செயற்பாடுகளை நிறுத்திக்கொள்கின்றன.

இதன் காரணமாக - பிரதேச செயலகங்கள், பிரதேச சபைகளால் நடத்தப்படும் விளையாட்டுப் போட்டிகள் எதிலும் பங்குபற்றாத விளையாட்டுக் கழகங்களின் பதிவுகளை ரத்துச்செய்ய நடவடிக்கை எடுக்கப்படும்.

ஆகவே, இதனைத் தவிர்க்க விளையாட்டுக் கழகங்கள் சகல விளையாட்டுப் போட்டிகளிலும் பங்கேற்க வேண்டுமென அவர் தெரிவித்துள்ளார்.

### பிரதித் திட்டமிடல் பணிப்பாளராக சிவபாதசுந்தரம்

யாழ்.செயலகத்தின் திட்டமிடல் பிரதிப் பணிப்பாளராக- சமுர்த்தி அபிவிருத்தி உதவி ஆணையாளர் என்.சிவபாதசுந்தரம் நியமிக்கப்பட்டுள்ளார்.

கடந்த சில வருடங்களாகச் செயலகத்தின் திட்டமிடல் பணிப்பாளராகவும், பின்னர் திட்டமிடல் பிரதிப் பணிப்பாளராகவும் கடமையாற்றி வந்த எஸ்.மகாலிங்கம் கடந்த 5 ஆம் திகதியுடன் ஓய்வு பெற்றதையடுத்தே அரச அதிபரினால் இந்த நியமனம் வழங்கப்பட்டுள்ளது.(100)

## மீளக்குடியேற அனுமதியின்றி தென்மராட்சி மக்கள் பரிதவிப்பு!

(தென்மராட்சி)

தென்மராட்சியில் எழுதுமட்டுவாள் தெற்கு, கரம்பன், முகமாலை, ஒட்டுவெளி, நாகர்கோவில், கிளாலி ஆகிய பகுதிகளில், இன்னமும் மக்கள் மீளக்குடியமரமுடியாத பகுதியாக இருப்பதனால், அப்பகுதியைச் சேர்ந்த மக்கள் பெரிதும் பாதிப்புக்குள்ளாகி வருகின்றனர்.

மேற்படி பகுதிகளில், தம்மை மீளக்குடியமர அனுமதிக்கக்கோரி, கடந்த மூன்று மாதங்களுக்கு முன்னர், தென்மராட்சி பிரதேச செயலகம் முன்பாக மறியற்போராட்டம் நடத்தப்பட்டது. எனினும், அரச அதிகாரிகளும் மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களும் எதுவித நடவடிக்கையையும் மேற்கொள்ளவில்லையென அப்பகுதி மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர். (36)

## பொதுத் தேர்தலை நடத்துவதற்கு தேர்தல் திணைக்களம் தயாராகிறது

திடீர்ப் பொதுத் தேர்தலை நடத்துவதற்கான ஏற்பாடுகளை, தேர்தல் திணைக்களம் மேற்கொண்டு வருவதாகத் தெரியவருகிறது.

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவுக்கும், ஆளும் ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கத்துக்கும் இடையிலான அரசியல் நெருக்கடிகள் நாளாந்தம் அதிகரித்து வருகின்றன. இதனால் - நாடாளுமன்றத்தைக் கலைத்து, புதிய தேர்தல் ஒன்றுக்கு ஜனாதிபதி சந்திரிகா உத்தரவிடலாம் எனக் கூறப்படுகிறது. இந்த நிலையில் - நாடாளுமன்றம் கலைக்கப்பட்டுப் புதிய தேர்தல் அறிவிக்கப்பட்டால், அதை நடத்தி முடிப்பதற்கான ஆரம்பக்கட்ட ஏற்பாடுகளில் தேர்தல் திணைக்களம் ஈடுபட்டிருப்பதாகத் தேர்தல் ஆணையாளர் தயானந்த திஸநாயக்க தெரிவித்தார்.

தேர்தலை எதிர்கொள்ளத் தயாராகுமாறு அரசாங்கத் தரப்பிடமிருந்தோ, ஜனாதிபதியிடமிருந்தோ அறிவுறுத்தல் ஏதும் கிடைக்காத போதும், சில முன்னேற்பாடான நடவடிக்கைகளைத் தாம் எடுத்துள்ளதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

## மர்மப்பொருள் வெடித்து மாணவி காயம்!

விறகிற்குள் இருந்த மர்மப்பொருள் வெடித்ததில், மாணவி ஒருவர் காயமடைந்த சம்பவம் - மட்டுவில் வடக்கு, முத்துமாரியம்மன் கோயிலடியில் இடம்பெற்றது. கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற இச்சம்பவம் பற்றித் தெரியவருவதாவது -

காலையுணவாகத் தாய் தோசை சுட்டுக்கொண்டிருந்தபோது, மகள் அடுப்புக்குள் பனஞ்சிராய்களை வைத்து எரித்தார். அப்போது அதற்குள் இருந்ததாகச் சந்தேகிக்கப்படும் மர்மப்பொருள் ஒன்று வெடித்தது. இதனால் மகளுக்குக் கண்ணுக்குக் கீழே காயம் ஏற்பட்டது.

இச்சம்பவத்தில் அதேயிடத்தைச் சேர்ந்த ரஜிகா மகேந்திரராஜா என்ற 10 வயதுச் சிறுமியே காயமடைந்தவராவார். இவர் மட்டுவில் வடக்கு சந்திரமௌலீச வித்தியாலயத்தில் ஆண்டு 5 இல் கல்வி கற்றுவருவது குறிப்பிடத்தக்கது. (24)

### சொற்பொழிவு

இந்து சமய விவகார அலுவல்கள் அமைச்சின் யாழ்.மாவட்ட பிராந்திய அலுவலகம் நடாத்தும் ஆன்மீகச் சொற்பொழிவு - நல்லைக் கந்தன் ஆலய முன்றலிலுள்ள நாவலர் மணி மண்டபத்தில் இன்று பி.ப 5.30 மணிக்கு இடம்பெறும்.

இந்நிகழ்வில் 'சத்தியம் சிவம் சுந்தரம்' என்ற பொருளில் தேசிய சேவைகள் மன்ற உதவிப் பணிப்பாளர் சிவதட்சணாமூத்தி சிறப்புச் சொற்பொழிவு நிகழ்த்துவார்.

## கைதடி தரவை வெளியில் வெடிக்காத நிலையில் ஷெல்கள்

### அகற்றுமாறு மக்கள் கோரிக்கை

கைதடிக்கு அருகேயுள்ள தரவைவெளியில் வெடிக்காத நிலையில் பல எறிகணைகள் காணப்படுகின்றன.

இப்பகுதியூடாக எந்நேரமும் மக்கள் பயணம் செய்வதால், இந்த வெடிபொருட்களினால் உயிர் ஆபத்தினை எதிர்நோக்க வேண்டியுள்ளது.

2000 ஆம் ஆண்டு தென்மராட்சிப் பிரதேசத்தில் நடைபெற்ற பாரிய யுத்தத்தின்போது, படையினர் இப்பகுதியிலும் பல்குழல் எறிகணைகளை வீசியமை குறிப்பிடத்தக்கது. இந்த எறிகணைகளே வெடிக்காதநிலையில் உள்ளன.

வெடிக்காதநிலையில் உள்ள இந்த எறிகணைகளைத் தகர்த்து அழிக்குமாறு சம்பந்தப்பட்டோருக்குப் பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (34)

# போதிய பஸ்சேவைகள் இல்லை தென்மராட்சிப் பயணிகள் அவதி!

## பருவச்சீட்டுக்கள் பெற்றும் மினிபஸ்ஸில் ஏறும்நிலை

(தென்மராட்சி)

தென்மராட்சிப் பகுதிக்குப் போதிய பஸ் சேவைகள் நடத்தப்படுவதில்லை எனப் பொதுமக்கள் புகார் தெரிவிக்கின்றனர். முகமா லைக்கும் யாழ்ப்பாணத்துக்கும் இடையில் காலையில் மிகக் குறைந்தளவு பஸ்களே சேவையில் ஈடுபடுத்தப்படுகின்றன.

காலையில் அதிகளவான பயணிகள் பிரயாணத்துக்காகக் காத்திருக்கின்றபோதும் குறைந்தளவு பஸ்களே சேவையில் ஈடுபடுத்தப்படுகின்றன. இதனால், அரச ஊழியர்கள், பாடசாலை மாணவர்கள் பெரிதும் சிரமங்களை எதிர்கொள்வதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பருவகாலச் சீட்டு பெற்றவர்கள் கூட போக்குவரத்துச்சபை பஸ்களில் ஏறமுடியாத நிலையில், மினி பஸ்களில் ஏறவேண்டிய நிலை கூட சில சந்தர்ப்பங்களில் ஏற்படுவதாக பொதுமக்கள் தெரிவித்தனர். (37)



தொண்டமனாறு சந்நிதியான் ஆச்சிரம சைவகலை பண்பாட்டு பேரவையினால் மாதாந்தம் வெளியிடப்படும் 'ஞானச்சுடர்' வெளியீட்டு விழாவில் பேராசிரியர் சி.க.சிற்றம்பலம் உரையாற்றுவதையும் அருகில் கு.தியாகராசா சர்மா (நீர்வை மணிஐயர்) அமர்ந்திருப்பதையும் படத்தில் காணலாம். (17)

# துர்நடத்தையில் ஈடுபட்ட இளைஞர்கள் நையப்புடைப்பு!

## துணைபோன பெண் விசாரணையில்

பண்ணாகம் பகுதியில் இரு பெண்களை அழைத்துச்சென்று துர்நடத்தையில் ஈடுபட்ட இரு இளைஞர்கள், அப்பகுதி மக்களால் பிடிக்கப்பட்டு நையப்புடைக்கப்பட்டனர்.

மேற்படி இளைஞர்களால் அழைதது வரப்பட்ட இரு பெண்களும் வலி. மேற்கு கோட்ட அரசியற் துறையினரிடம் ஒப்படைக்கப்பட்டனர். அத்துடன், துர்நடத்தைக்குத் துணையாக இருந்த பெண் ஒருவரும் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டார்.

துர்நடத்தையில் ஈடுபட்ட இளைஞர்களில் ஒருவர் க.பொ.த உயர்தர வகுப்பு மாணவன் என்றும் மற்றவர் வவுனியாவைச் சேர்ந்தவர் எனவும் விசாரணைகளில் தெரியவந்தது.(118)

# ஒரு லட்சத்து 13 ஆயிரம் வீடுகள் யுத்தத்தால் குடாநாட்டில் சேதம்!

## வீடமைப்பு அதிகாரசபை தகவல்

யாழ்.மாவட்டத்தில் கடந்த இருபது வருடங்களில் இடம்பெற்ற போர் நடவடிக்கைகள் காரணமாக, ஒரு லட்சத்து 13 ஆயிரத்து 546 வீடுகள் சேதமடைந்துள்ளதாகத் தேசிய வீடமைப்பு அதிகாரசபையால் அண்மையில் திரட்டப்பட்ட மதிப்பீடுகளிலிருந்து தெரியவந்துள்ளது.

இத்தொகையில் 24 ஆயிரத்து 331 நிரந்தர வீடுகள் முற்றாக சேதமடைந்துள்ளன. நிரந்தரமான வீடுகளில் 41 ஆயிரத்து 459 வீடுகள் பகுதியாகச் சேதமடைந்துள்ளன.

அதேநேரம், அரை நிரந்தர வீடுகளில் 13 ஆயிரத்து 200 வீடுகள் முழுமையாகவும், 13 ஆயிரத்து 439 வீடுகள் பகுதியாகவும் சேதமடைந்துள்ளன.

இது இவ்வாறிருக்க - 19 ஆயிரத்து 917 குடிசைகள் முழுமையாகவும், ஆயிரத்து 200 குடிசைகள் பகுதியாகவும் சேதமடைந்துள்ளன.

மொத்தமாகச் சேதமடைந்த ஒரு லட்சத்து 13 ஆயிரத்து 546 வீடுகளுள், அதியுயர் பாதுகாப்பு வலயத்தினுள் இருக்கும் வீடுகளுக்கு ஏற்பட்ட பாதிப்புப் பற்றிய தகவல்களைத் திரட்டமுடியாமல் போயுள்ளதாகத் தேசிய வீடமைப்பு அதிகாரசபையின் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இதேவேளை - யாழ்ப்பாணக் குடாநாட்டில் 1981 இல் திரட்டப்பட்ட குடிசனத்தொகை மதிப்பீட்டின் அடிப்படையில் - ஒரு லட்சத்து 66 ஆயிரத்து 85 வீடுகள் இருந்தன என்பதும் குறிப்பிடத்தக்கது. (100)

# சின்னஞ்சிறு செய்திகள்

### அடுத்த வாரம் மின் விநியோகம்

(யாழ்ப்பாணம்)

இலங்கை மின்சார சபையினால், தெல்லிப்பளை - துர்க்காபுரம், பன்னாலை, அளவெட்டி கிழக்கு போன்ற பிரதேசங்களுக்கு அடுத்தவாரம் முதல் மின்சாரம் வழங்கப்படவுள்ளதாகத் தெரியவருகிறது. இதற்கான மின் இணைப்பு வேலைகள் ஓரளவு பூர்த்தியடைந்துள்ளதாக மின்சாரசபை அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (72)

### ஆலய உற்சவம்

(பன்னாலை)

பன்னாலை சிவபூதராயர் ஆலய வருடாந்த அலங்கார உற்சவம் எதிர்வரும் 21 ஆம் திகதி ஆரம்பமாகித் தொடர்ந்து பதினைந்து நாட்கள் நடைபெறும்.

### மண்கும்பானில் ஆலயங்கள் சேதம்

(யாழ்ப்பாணம்)

கடந்த செவ்வாய்க்கிழமை வீசிய சூறாவளிக் காற்றினால் மண்கும்பானிலுள்ள பிள்ளையார் கோயில் மற்றும் கறுப்பாச்சி அம்மன் ஆலயம் ஆகியவற்றின் கூரைகள் பலத்த சேதமடைந்தன. மரங்கள் இந்த ஆலயங்களின் மீது முறிந்து விழுந்ததால் 500 இற்கும் மேற்பட்ட ஓடுகள் சேதமடைந்தன. (53)

### மின்விநியோகத்தில் பாரபட்சம்

(யாழ்ப்பாணம்)

மின்விநியோகத்தில் பாரபட்சம் காட்டப்படுவதாக மயிலிட்டிப் பகுதியிலிருந்து இடம்பெயர்ந்து வியாபாரி மூலையில் வசிக்கும் பொதுமக்கள் தெரிவித்துள்ளனர்.

மின்சார சபையினரிடம் மின் இணைப்பு வழங்கும்படி இப்பகுதி மக்கள் பல தடவைகள் கேட்டும், அவர்கள் இதுகுறித்து எதுவித நடவடிக்கையும் எடுக்கவில்லை என மக்கள் தரப்பில் தெரிவிக்கப்படுகிறது. (15)

### புன்னாலைக்கட்டுவனில் வெங்காயத்தில் நோய்த்தாக்கம்

(புன்னாலைக்கட்டுவன்)

புன்னாலைக்கட்டுவன், ஈவினைப் பகுதிகளில், வெங்காயப் பயிரில் நோய்த்தாக்கம் அதிகரித்துள்ளது. இதனால், நல்ல விளைச்சலை எதிர்பார்க்க முடியாதுள்ளதாக விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

காலநிலை சீரின்மையே இதற்குக் காரணம் எனவும் அவர்கள் தெரிவித்தனர். (83)

### சொந்த இடத்தில் இயங்கும் வேம்பொடுகேணி பாடசாலை

(பளை)

பளை நகரப்பகுதியில் 'இயங்கி வந்த வேம்பொடுகேணி அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலை கடந்த 12 ஆம் திகதி முதல் சொந்த இடமான இத்தாவில் சந்தியில் மீண்டும் இயங்க ஆரம்பித்துள்ளது.

போரினால் பெரிதும் அழிவுக்குள்ளான இப்பாடசாலை - தற்காலிக கொட்டகைகளில் இயங்க ஆரம்பித்துள்ளது குறிப்பிடத்தக்கது.

### சிரமதானமும் அன்னதானமும்

இரண்டாவது உலக இந்து மாநாட்டையொட்டி நாளை மறுநாள் ஞாயிற்றுக்கிழமை காலை 7 மணிகக்கு விளைவேலி - மருதடி வீரகத்தி விநாயகர் ஆலயத்தில் சிரமதானம் நடைபெறும். அத்துடன், ஆலயத்தல் அன்றையதினம் அன்னதானம் வழங்கவும் ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

### மின்சாரத்தை துண்டிக்கும் விஷமிகள்

(யாழ்ப்பாணம்)

ஈவினைப் பகுதியில் கடந்த சில நாட்களாக மின்சார இணைப்புக் கம்பிகள் மீது, விஷமிகள் சைக்கிள் செயினை வீசி, மின்விநியோகத்தைத் துண்டித்து வருகின்றனர்.

இவ்வாறு திட்டமிட்ட முறையில் மின்சார விநியோகத்தைத் துண்டிக்கும் விஷமிகளைப் பிடிக்க இப்பகுதி மக்கள் விழிப்புடன் இருப்பதாகவும் தெரியவருகிறது. (83)

### சாவகச்சேரியில் நாய்களுக்கு தடுப்பூசி

(சாவகச்சேரி)

சாவகச்சேரிப் பகுதியில் வளர்ப்பு நாய்களுக்கான தடுப்பு மருந்துகள் எதிர்வரும் 18 ஆம் திகதி ஏற்றப்படவுள்ளதாகச் சாவகச்சேரி நகரசபைச் செயலாளர் மு.சரவணபவ அறிவித்துள்ளார்.

18 ஆம் திகதி காலை 9 மணிக்கும் 11 மணிக்கும் இடையில் நகரசபை அலுவலகத்திலும்,

காலை 11 மணிக்கும் 12.30 மணிக்கும் இடையில் நுணாவில் மத்தி கிராம அலுவலர் பணிமனையிலும் தடுப்பூசி ஏற்றப்படும்.

பி.ப 12.30 மணிமுதல் 2 மணி வரை நுணாவில் கிளை நூலகத்திலும் வளர்ப்பு நாய்களுக்கான தடுப்பூசி ஏற்றப்படும் எனவும் சாவகச்சேரி நகரசபை செயலாளர் மேலும் அறிவித்துள்ளார்.

# மகாபொல நிதியத்துக்கு ரூ.100 கோடியை ஜனாதிபதி நிதியம் தரவேண்டியுள்ளது!

## அமைச்சர் ரவி கருணாநாயக்க தெரிவிப்பு

(கொழும்பு)

மகாபொல புலமைப்பரிசில் நிதியத்திற்கு ஜனாதிபதி நிதியத்திலிருந்து சுமார் நூறு கோடி ரூபா கிடைக்க வேண்டியிருப்பதாக, வர்த்தக மற்றும் நுகர்வோர் விவகார அமைச்சர் ரவி கருணாநாயக்க தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கை ஒன்றில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது -

மகாபொல புலமைப்பரிசில் நிதியத்திற்கு, இந்த நிதி கிடைக்காமையால் பல்வேறு சிக்கல்கள் ஏற்பட்டுள்ளதாகத் தெரிவித்தார்.

குறிப்பாக இந்த வருடம் பல்கலைக்கழகங்களுக்குப் புதிதாக இரண்டு மாணவர் குழுக்களை அனுமதிப்பதற்குப் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு தீர்மானித்துள்ளது.

இவர்களுக்கு வேண்டிய புலமைப்பரிசில் நிதிக்காக சுமார் 140 கோடி ரூபா தேவைப்படுவதாகவும் அமைச்சர் ரவி கருணாநாயக்க தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி நிதியத்திலிருந்து மகாபொலவுக்கு நிதி ஒதுக்கீடு செய்யப்படாததால், பல்கலைக்கழக மாணவர்களுக்கான உதவித்திட்டங்களைச் செயற்படுத்த முடியாத நிலை தோன்றியிருப்பதாகவும், இதற்கு ஜனாதிபதியே பொறுப்பேற்க வேண்டும் எனவும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

# ஸ்தாபகர் தினமும் பரிசளிப்பு விழாவும்

(அராலி)

காரைநகர் கலாநிதி ஆ.தியாகராசா மத்திய மகா வித்தியாலய ஸ்தாபகர் தினமும், பரிசளிப்பு விழாவும் இன்று காலை 9 மணிக்குக் கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

அதிபர் மு.சு.வேலாயுதபிள்ளை தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் - பிரதம விருந்தினராக காரைநகர் உதவி அரசாங்க அதிபர் வே.சாம்பசிவம் கலந்துகொள்வார். சிறப்பு விருந்தினர்களாக தீவக வலய பிரதிக்கல்விப் பணிப்பாளர் இராதாகிருஷ்ணன், வைத்திய கலாநிதி திருமதி கனகசபை ஆகியோர் கலந்துகொள்வர். (118)

### கல்வி அதிகாரிகள் விஜயம்

(புத்தூர்)

புத்தூர் ஸ்ரீ சோமஸ்கந்தா கல்லூரி மற்றும் வாதரவத்தை விக்னேஸ்வரா வித்தியாலயம் ஆகியவற்றுக்கு - மாகாணக்கல்வி அதிகாரிகள் குழு கடந்த திங்கட்கிழமை விஜயம் செய்தது.

அதிகாரிகள் குழுவினர், பாடசாலை மற்றும் ஆசிரியர்களின் குறை - நிறைகள் தொடர்பாகவும், மாணவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பாகவும், கற்பித்தலில் எதிர்கொள்ளப்படும் பிரச்சினைகள் குறித்தும் ஆராய்ந்து அறிந்துகொண்டனர்.

### பொங்கல் விழா

(புத்தூர்)

புத்தூர் கிழக்கு பெரிய தம்பிரான் ஆலய வருடாந்த பொங்கல் மடை இன்று வெள்ளிக்கிழமை இரவு நடைபெறவுள்ளது. (08)

# பச்சிலைப்பள்ளி கூட்டுறவுச்சங்க புதிய நிர்வாகிகள் தெரிவாகினர்

(பளை)

ஆறு வருடங்களுக்குப் பின்னர் பச்சிலைப்பள்ளி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்திற்குப் புதிய நிர்வாக சபை தெரிவுசெய்யப்பட்டுள்ளது.

சங்கத்தின் முன்னாள் தலைவர் சி.சுந்தரலிங்கம் தலைமையில் இடம்பெற்ற இப்புதிய நிர்வாகசபைத் தெரிவுக்கூட்டத்தில் - புதிய தலைவராக சி.வதனராசாவும், உபதலைவராக சி.இராமலிங்கமும் தெரிவு செய்யப்பட்டனர்.

தற்பொழுது நிரந்தர கட்டடம் இன்றியும், பாரிய தொழிற்படு நட்டத்திலும் இயங்கிக்கொண்டிருக்கும் இச்சங்கத்தினை, தாம் மீண்டும் கட்டியெழுப்பப் போவதாகப் புதிய நிர்வாகத்தினர் தெரிவித்தனர்.


இந்நிகழ்வில் நிர்வாக சேவையினரும், கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் அலுவலக பிரதிநிதிகளும், பெருந்தொகையான பொதுச்சபை உறுப்பினர்களும் கலந்து கொண்டனர். (115)

# தொலைத் தொடர்பு நிலையங்கள் கட்டணத்தைக் குறைக்கவில்லை

ரெலிகொம் நிறுவனம் கடந்த மாதம் முதல் சர்வதேச தொலைபேசி அழைப்புக்களைப் பெற்றுக்கொள்வதற்கான கட்டணத்தைக் குறைத்துள்ள போதிலும், யாழ்.நகரப்புறத்திலும் மற்றும் பல்வேறு இடங்களிலுமுள்ள பெரும்பாலான தனியார் தொலைத்தொடர்பு நிலையங்கள் கடடணங்களைக் குறைக்காது, கூடிய கட்டணத்தை அறவிடுவதாகப் பாவனையாளர்கள் தெரிவிக்கின்றனர்.

பிரிட்டன், கனடா, அமெரிக்கா, பிரான்ஸ், ஜேர்மனி போன்ற நாடுகளுக்கான தொடர்புகளுக்கு நிமிடத்துக்கு ரூபா 20 தொடக்கம் ரூபா 25 வரை அறவிடப்படுவதாக ரெலிகொம் நிறுவனம் அறிவித்திருந்தது. எனினும், பாவனையாளர்களிடமிருந்து ரூபா 50 முதல் 70 வரையிலான கட்டணத்தையே தனியார் தொலைத்தொடர்பு நிலையங்கள் அறவிட்டு வருவதாகத் தெரியவருகிறது.

# கோபத்தினால் ஏற்படும் நெருக்கீட்டை





அருட்திரு
எஸ்.ஜே.இராஜநாயகம்

**உளநெருக்கீடுகளால் பாதிக்கப்பட்டோருக்கான ஆற்றுப்படுத்தல்களை மேற்கொண்டுவரும் அகவொளி குடும்பவள நிலையத்தின் இயக்குநர் அருட்திரு எஸ்.ஜே.இராஜநாயகத்துடனான நேர்காணல்.**

# மன்னித்தல் மூலம் போக்கமுடியும்!

**அகவொளி குடும்ப வளத்துணை நிலையத்தின் செயற்பாடுகள் என்ன?**

விதவைகளை ஆற்றுப்படுத்தல், கணவனால் கைவிடப்பட்டவர்கள், கணவன், மாமி, மாமா ஆகியோரின் கொடுமைகளுக்கு உள்ளாக்கப்பட்டவர்களுக்கான உளவியல் பயிற்சிகளையும் வழங்கி வருகிறோம்.

எமது ஸ்தாபனம் பொருளாதார ரீதியான உதவிகளை வழங்குவதில்லை. மாறாகக் கருத்தரங்குகள், பயிற்சிப் பட்டறைகள் மூலமாகவும் நாடகம், தெருக்கூத்து ஆகியவற்றின் மூலம் காட்சிப்படுத்தியும் ஆற்றுப்படுத்திவருகிறோம்.

போராட்ட காலங்களில் விதவைகள் ஆக்கப்பட்டோர், நெருக்கீடுகளுக்கு உள்ளாக்கப்பட்டோர் எனப் பலரும் இதற்குள் அடங்குவர்.

★ உளநலச் செயற்பாடுகளில் தேவைப்படுவோருக்கும், நாடுவோருக்கும் உள வளத்துணை வழங்குதல்.
★ சார்ந்த வழிமுறைப் பயிற்சிகளையும் உள சமூகசேவையையும் வகுத்தல்.
★ உளநலம் தொடர்புடையவர்களில் விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்கான பயிற்சிப் பட்டறைகள், கருத்தரங்குகளை நடாத்துதல்.
★ முன்பள்ளி ஆசிரியர்கள், தாதிகள், பல்கலைக்கழக மாணவர்கள் போன்ற பல்வேறு துறையினருக்கான பயிற்சிகளில் உளநலம் சார்பான வள ஆளணியினரை வழங்குதல் என்பனவற்றில் எமது செயற்பாடுகள் அமைகின்றன.

**திருமண ஆயத்தப் பயிற்சிநெறி பற்றி உங்கள் கருத்து?**

குடும்பம் சீராக வாழவேண்டும் என்கின்ற நோக்கில்தான், இந்த திருமண ஆயத்தப் பயிற்சிநெறியை வழங்கி வருகிறோம். எத்தனையோ இளம் தம்பதிகள் பலவிதமான எதிர்பார்ப்புகளோடு திருமணம் முடித்து, பின்னர் வாழ்க்கையில் ஏற்படுகின்ற சிறிய பிரச்சினைகளைக் காரணங்காட்டி திருமணவாழ்வை முறித்து விடுகிறார்கள்.

இப்படியாகத் திருமணவாழ்வு இடையில் முறிந்து வாழ்க்கை பாதிக்கக்கூடாது என்பதற்காகவே திருமண ஆயத்தப்பயிற்சியை உளவியல் ரீதியாக வழங்கி வருகிறோம். உளவியல், ஆன்மீகரீதியில் கருத்துரைகள் வழங்கப்படுகின்றன.

எமது அகவொளி என்ற குடும்ப வளத்துணை நிலையத்தின் ஊடாகப் பயிற்சி பெற்ற தம்பதியர், பெற்றோர், பிள்ளைகள் தம் வாழ்வை நிறைவாகவும், திறமையாகவும், மகிழ்வாகவும் அமைத்துள்ளார்கள்.

இப்பயிற்சிநெறி மாதத்தின் கடைசிச் சனி, ஞாயிறு தினங்களில் கால 9.15 மணிமுதல் மாலை 4.30 மணிவரை நடாத்தப்படுகிறது.

**உள நெருக்கீடுகளும் அதற்கான உளவியல் ஆற்றுப்படுத்தல் பற்றி...?**

நெருக்கீட்டு நிலைக்குப் பல காரணிகள் உண்டு. ஒரு நாளில் வரும் பல நிகழ்வுகள் ஒருவரை உடல், உணர்வுரீதியில் பாதித்து, அவரின் வாழ்வைச் சின்னாபின்னமாக்கலாம். எமது குடும்பத்தில் இருக்கும் பிரச்சினை - பணம், வேலை, நாம் அன்பு செய்பவர், எமது சுகவாழ்வு என்பன பற்றி நாம் மிகவும் அக்கறையும், கவலையும் கொண்டிருக்கிறோம். இவைகள் எமக்கு நெருக்கீட்டைக் கொண்டு வரலாம். "நான், எல்லாம் இறைவன் என்றே வாழ்கிறேன். இறைவன் ஏன் எனக்கு இப்படிச் செய்கின்றார்" என்று ஒருவர் ஆதங்கப்படலாம். நாம் செய்யும் வேலைகள் நேரம் போதா விடத்தும், நேரமும் எமக்கு நெருக்கீட்டு நிலையை உண்டுபண்ணலாம்.

சில மகிழ்வான விடயங்களும் உதாரணமாக- திருமணத்திற்கு ஆயத்தம் செய்தல், வேண்டிய ஒருவரை சந்திக்கப் பயணம் செய்யும்போதும், இதுபோன்ற வேறு சந்தர்ப்பங்களிலும் நெருக்கீடுகள் உருவாகலாம். "அவைகள் வரும்போது எமது நடத்தைகளைப் பொருத்தப்பாடாக மாற்றவேண்டும்" என்கிறார் கலாநிதி கேர்பேட் பென்சன் என்ற உளவியலாளர். திருமணம் முடித்தலும், திருமணத்தை முறித்தலும், புதிய வேலை கிடைத்தலும், வேலை இழத்தலும் எம்மில் ஒரு மன ஆவல்நிலையை ஏற்படுத்துகின்றது. சிலவேளைகளில் பிள்ளைகளின் பிரச்சினையைப் பெற்றோரும் - பெற்றோரின் கவலைகளைப் பிள்ளைகளும் அறியாது இருக்கின்றனர்.

இளையோர் தமது சகபாடிகளிடமிருந்து அழுத்தங்களுக்குள்ளாகின்றனர். ஆண்களும், பெண்களும் நெருக்கீடுகளை அனுபவிக்கும் விதத்தில் வேறுபாடுள்ளது. "ஆண் ஒரு நேரத்தில் ஒன்றைப் பற்றிக் கவலைப்படுவான். ஆனால், பெண் ஒரு நேரத்தில் பலதைப் பற்றிக் கவலை கொள்வாள்". என்றும் கூறுவர்.

உங்கள் வேலைகளிலிருந்து சில நிமிடங்களை உங்களுக்காக ஒதுக்கிவையுங்கள். 10 நிமிடங்கள் என்றாலும் அது உங்களுக்கு உதவிசெய்யும்.

உலாத்துங்கள், வானத்தைப் பாருங்கள், புத்தகம் வாசியுங்கள், இயற்கைக் காட்சிகளை இரசியுங்கள். இவைகள் உங்களின் மனதுக்கு இதமான உணர்வைக் கொடுத்து, உங்களது எண்ணங்களை மாற்றலாம் அல்லது முன்னேற்றலாம்.

இசைகேட்டல், நல்லதொரு குளியல், படம் பார்த்தல், நண்பருடன் நேரத்தைச் செலவிடுதல் ஆகியன நாம் - எமது வாழ்க்கையில் வரும் நெருக்கீடுகளைத் தவிர்க்க உதவுகின்றன.

சிலவேளைகளில், கடந்த காலத்தில் நாம் செய்த தவறுகள் எமது நினைவில் வந்து எம்மைக் குழப்பலாம். இதனால் மன ஆவல்நிலை ஏற்பட்டு, எம்மை முறுல் நிலைக்கு உள்ளாக்கலாம். இந்த வேளைகளில் உங்களை நீங்களே மன்னியுங்கள். உங்களைப் பற்றிப் பொருத்தப்பாடான, நேரான கருத்தைக் கொண்டிருங்கள். நாம் ஒவ்வொருவரும் தனித்துவமாக, நன்றாக ஒரு விசேட நோக்குடன் இறைவனால் படைக் கப்பட்டிருக்கின்றோம் என்பதை உணருங்கள். ஒருவர் தன்னைப் பற்றிக் கொண்டிருக்கும் தாழ்வுணர்வு ஒரு நெருக்கடான சூழலைக் கையாள அவருக்கு மிகவும் கடினமானதாக இருக்கும். நீங்கள் கோபமாக உள்ளவரை மன்னியுங்கள். இதனால், நீங்கள் மனதில் சேமித்து வைத்திருக்கும் கோபத்திலும், துன்பத்திலும் ஏற்படும் நெருக்கீட்டைக் குறைக்கமுடியும் அல்லது மன்னித்தல் என்ற வடிகாலின் மூலம் போக்கமுடியும்.

இறைவன் எம்மை எவ்வளவோ மன்னிக்கின்றார் . நாமும் ஏழு முறையல்ல எழுபது முறை மன்னிப்போமே.

நேர்காணல்
உஷா, கலாநந்தி

# தலைவி நீ தலை நிமிர்...!



எந்த விடயமும் கொண்டு நடத்தப்படும் பொழுது அனைத்தும் சரிவர அமைந்து, எந்தப் பிரச்சினையுமில்லாமல் நடைபெறுவது அரிது.

பிரச்சினைகள் தோன்றுவது இயல்பு. அவற்றைத் தீர்த்து வெற்றிகரமாக முன்னேறுவதிலேதான் தலைமைத்துவத்தின் திறமை இருக்கிறது.

குடும்பதைக் கொண்டு நடத்தும்போதும் பிரச்சினைகள் தோன்றலாம். ஸ்தாபனத்தை நடத்திவரும் போதும் பல்வகைப்பட்ட பிரச்சினைகள் ஏற்படலாம்.

இவற்றைக் கண்டதும் மனச்சோர்வுற்றுவிடக்கூடாது. பிரச்சினைகளைக் கண்டுங்காணாத மாதிரி விட்டு, அவை தானே தீர்ந்துவிடும் என்றும் இருத்தலாகாது. சில பிரச்சினைகள் வளர்ந்தால், அதன்பின் தீர்ப்பது கஷ்டமானதாகவும் போய்விடலாம்.

எனவே, ஆரம்ப கட்டத்திலேயே அதன் தன்மையையும், தார்ப்பரியத்தையும் புரிந்துகொண்டு அப்பிரச்சினையை ஏற்றவகையில் அணுகித் தீர்க்கவேண்டும்.

ஒரே வகைப்பிரச்சினையைக்கூட ஒரேமுறையைக் கையாண்டு தீர்க்கமுடியாது போகலாம். பிரச்சினை ஒத்ததாக இருந்தாலும் - அது தோன்றிய இடம், நிலை, காலம் போன்றவை வேறுபட்டிருக்கும். அதனோடு தொடர்பானோர் வேறுபட்ட இயல்பும், குணாதிசயமும் கொண்டவர்களாக இருப்பர். இதனால், முன்னைய பிரச்சினைகளைத் தீர்த்த நடவடிக்கை - இந்தப் பிரச்சினையைப் பூதாகரமாக்கிவிடலாம்.

ஒரு குடும்பத்தில் ஒரு மகள் காதலித்த பையனைப் பிடிக்கவில்லை என்றதும், வேறொரு மணமகனைத் தேர்ந்தெடுத்து, நிச்சயப்படுத்தி, அவளுக்குப் பெற்றோர் திருமணம் செய்துவைத்துவிட்டனர். அதேகுடும்பத்தில் மற்றொரு மகளும் காதலித்தாள். பெற்றோர் இவளுக்கும் வேறொரு பையனை நிச்சயித்தனர். ஆனால், அவள் காதலித்தவனைப் பதிவுத்திருமணம் செய்துகொண்டு போய்விட்டாள். ஒரே குடும்பத்தில், ஒரே வகைப்பிரச்சினை என்றாலும், அதில் தொடர்புபட்டவர்களின் மனத்துணிவு, சந்தர்ப்பம், சூழ்நிலை என்பன வெவ்வேறு முடிவுகள் ஏற்படக்காரணம் ஆகிவிட்டன. எனவே, பிரச்சினை ஒன்றை இப்படித் தீர்க்கலாம் என முடிந்த முடிபாக எதையும் கூறிவிடமுடியாது.

பிரச்சினை ஒன்றைத் தீர்ப்பதற்குச் சில நடைமுறைகளைப் பின்பற்றலாம்.

முதலில் நிலைமை, சூழ்நிலை, காரணம் போன்றவற்றை ஆராயலாம். முக்கியமாகப் பிரச்சினை என்னவென்பதைத் தெளிவாக அறிந்துகொள்ளவேண்டும். அதற்கான காரணங்களை அவதானமாக ஆராயவேண்டும்.

இப்பிரச்சினை ஏற்படாமல் இருக்கக்கூடியதாகத் தற்போதைக்குப் பதிலாக என்ன செய்யலாம் என்பது பற்றி பல்வேறு மாற்றுவழி ஆலோசனைகளைத் துறை சார்ந்தவர்களிடம் இருந்து அறிந்து கொள்ளலாம்.

அம் மாற்றுவழிகளை நடைமுறைப்படுத்தும்போது, என்னென்ன பிரச்சினைகள் தோன்றும்? என்னனென்ன பிரச்சினைகள் தீரும்? என்பதைச் சிந்தித்துப் பார்க்க வேண்டும். அப்படி ஆராய்ந்து சிறந்த மாற்றுவழியை அல்லது தீர்வைக் கண்டறிய வேண்டும்.

அதனைச் செயற்படுத்தி, அதில் ஏதாவது திருத்தங்கள் செய்யவேண்டுமாயின் அவற்றைச் செய்யவேண்டும். பிரச்சினைகளைத் தீர்ப்பது தலைவியின் தனித்திறமை ஆகும். உங்கள் நுண்ணறிவை அதற்குப் பயன்படுத்தவேண்டும். அந்தத் திறமை ஒரு தலைவியிடம் நிச்சயம் உண்டு.

யோகேஸ்வரி சிவப்பிரகாசம்

# சூரியகாந்தி (Sun flower)



**தேவையான பொருட்கள்**

*ஸ்ரொக்கிங் நெற் - மஞ்சள், பச்சை*
*பபிளின் துணி - கறுப்பு*
*தேயிலை*
*மகரந்தம்*
*கம்பி - Gold, பச்சை*
*பைண்டர் கம்*
*கட்டுக்கம்பி*
**flower tape-1**

**செய்முறை**

**sun flower** செய்வதாயின், 7 அங்குலத்தில் 12 **Gold** கலர் கம்பிகளை வெட்டி எடுத்து, அதன் இரு அந்தங்களையும் சேர்த்து முறுக்கிய பின், மேல் பகுதியைக் கூராக வளைக்கவும். பின்னர் மஞ்சள் ஸ்ரொக்கிங்நெற்றால் சுற்றி இறுகக் கட்டவும். பின் ஒரு ரூபாயைக் கறுப்புத் துணியினால் மூடிக்கட்டி, கட்டுக் கம்பியுடன் சேர்த்துக் கட்டவும். பின் அதனைச் சுற்றி அதாவது, ஒரு ரூபாவைச் சுற்றி 21 சோடி மகரந்தத்தை வைத்துக் கட்டிய பின், ஸ்ரொக்கிங்நெற் இதழ்கள் யாவற்றையும் சுற்றிக்கட்டி அவற்றை வெளிப்புறமாக வளைத்துவிடவும். மொட்டு செய்வதாயின் - 5 அங்குமுடைய 12 **Gold** கலர்க்கம்பிகளை வெட்டி, 50 சதம் வைத்துக்கட்டி மேற்கூறியவாறு செய்யவும். இலை செய்வதற்குப் பச்சைக்கம்பியை இரண்டாக மடித்து (முழுக்கம்பி), பேனைக்குச்சில் சுற்றி ஓரளவிற்கு இழுத்து, பச்சை ஸ்ரொக்கிங்நெற்றால் இறுகக்கட்டவும். பின் கட்டுக்கம்பியுடன் சேர்த்துக் கட்டி, **Flower tape** எல்லாவற்றிற்கும் சுற்றிய பின்- மொட்டு, பூ, இலை ஆகியவற்றை விரும்பிய ஒழுங்கில் ஒழுங்குபடுத்தலாம். அல்லது கிளைகள் உள்ள கொப்பிற்கு **Flower tape** சுற்றியும் ஒழுங்குபடுத்தலாம்.

# ஒரு பூவின் பயணம்

வானத்தின் நிலவாயல்ல
பூச்சாடிப் பூமரமாய்...
கண்டவை கைக்கெட்டவில்லை.
நடந்தேன்,
முள்வேலியில் முட்டிநின்றேன்.
திரையில் என்னை நிற்கவைத்தார்கள்
என்கனவைச் சுட்டுவீழ்த்தி
இருட்டறையில் அடைத்தார்கள்
என் பிறப்பு வீணில் போகிறது.
என் வசித்தலை உறுதிப்படுத்துவதில்
என் வாழ்தல் கழிகிறது.

'சொல்லில் எழுதிய வாழ்வு' தொகுப்பிலிருந்து கவிஞர் நிஷாந்தனின் சிலவரிகளோடு ஆரம்பமாகிறது இன்றைய பயணம். கறைபடிந்த கரங்களுள் சிக்கிச் சீரழிகின்ற சின்னஞ்சிறுமிகளின் அவலம் ஒரு புறமிருக்க, அவர்கள் பணியாட்களாகப் பயன்படுத்தப்படும் துயரமும் எடுத்து நோக்கப்படத்தக்கது.

ஒரு பெண் குழந்தை சிறுவயதிலேயே தனது குடும்பத்தின் வேலைப்பளுவைச் சுமக்கும்படி எதிர்பார்க்கப்படுகிறாள். ஒரே வயதிலான இரு சிறுபிள்ளைகள் ஆறாம் ஆண்டில் கல்வி கற்கிறார்கள். பெண் பிள்ளை - தாயின் வேலைகளில் தானும் பங்கெடுக்கிறாள். சில சந்தர்ப்பங்களில் குறித்த வேலைகளைச் செய்யும்படி நிர்ப்பந்திக்கப்படுகிறாள். வீட்டைச் சுத்தமாகப் பேணுதல், அழகுபடுத்துதல் ஆகியவற்றில் பெண்பிள்ளை இயல்பாக ஈடுபடுகின்றாள். ஆனால், இவற்றில் பொதுவாக ஆண் பிள்ளை ஈடுபடுவதில்லை. அவனைப் பற்

## கனவுகள் கருக... கருக...

**அத்தியாயம் 06**

றிய எதிர்பார்ப்பு அவன் நல்லவனாக, குழப்படி இல்லாமல் படிக்கவேண்டும் என்பதே. இங்கு கருத்திலெடுக்கப்படுகின்ற ஆண் - பெண் அசமத்துவநிலை சாதாரண வேளைகளில் பாதிப்பை ஏற்படுத்துவதில்லை. எனினும் சமூக, பொருளாதாரச் சிக்கல்களுக்குள் குடும்பம் அகப்படுகின்ற போது அல்லது குடும்பத்தலைவி நோய் வாய்ப்படும்போது அல்லது இறக்கும்போது, ஒரு சிறுமியின் தலையில் பெருஞ்சுமை கவிகிறது. அவளது வீட்டுப் பொறுப்புக்கள்- அவளது இயல்பான நாளாந்த வாழ்விலிருந்து அவளை விலக வைக்கின்றன. அவளது முதன்மையான பாதிப்பு கல்வியாக உள்ளது.

பாடசாலைச் சிறுமிகளில் இத்தகைய நிலையைப் பரவலாக அவதானிக்கலாம். வரவில் தொடர்ச்சியாக ஒழுங்கீனமான சிறுமிகளை எடுத்து நோக்கினால், "பெண் பிள்ளைதானே'' என்றநிலையில் அவர்களின் கல்வி மேம்பாடு சமூகத்தில் புறக்கணிக்கப்படுவதை அறியலாம்.

ஒரு சிறுமி ஆண்டு 5 புலமைப் பரிசில் பரீட்சைக்குத் தோற்றவேண்டியுள்ளது. ஆனால், வரவில் ஒழுங்கீனம். விசாரித்த போது, அவள் தன்கீழுள்ள மூன்று சகோதரிகளையும், ஒரு சகோதரனையும் பராமரிக்க வேண்டியுள்ளாள். தாய் - கூலி வேலை செய்யும் இன்னொரு குடும்பத்தில்,

..................................................

..................................................

எல்லா முகங்களும்
எல்லாத் திரைகளும்
நாட்கணக்கில் அழுக்கேறி...
எந்த உலகம் உன்னதமானது?
எந்த வாழ்க்கை உயர்ந்தது?
கேள்விகள் அனைத்தும்
அர்த்தங்கள் இழந்துபோக
புத்தகங்களை நெருப்புத் தின்கிறது.

அருந்ததியின் 'இரண்டாவது பிறப்பு' கவிதைத் தொகுதியிலிருந்து எடுக்கப்பட்ட இவ் வரிகளில் - இக்குழந்தைகளின் கஷ்டமும், வாழ்வு சொல்லும் துயரம் கவிந்திருக்கிறது.

இலங்கையைப் பொறுத்தவரையில் சிறுபிள்ளைத் தொழிலாளர்கள் ஒப்பீட்டளவில் குறைவெனினும், தற்போது இந்த எண்ணிக்கை மிக அதிகரித்துள்ளது. வெடிமருந்து சுற்றுதல், பீடி, சுருட்டுத் தொழிற்சாலைகள், விளையாட்டுப் பொருள் உற்பத்தி, தீப்பெட்டித் தொழிற்சாலை, தையல்வேலை, பெட்டி, பாய் இழைத்தல் போன்ற பல்வேறுபட்ட களங்களில் பிள்ளைத் தொழிலாளர்களுக்கான வரவேற்பு அதிகமாக உள்ளது. மிகக்குறைந்தளவு ஊதியத்தில் வளர்ந்தவர்களால் செய்விக்கமுடியாத, சலிப்பு நிறைந்த வேலைகளைப் பிள்ளைகளைக் கொண்டு செய்வித்தலானது அவர்களின் உடல், உளத்தாக்கத்திற்குப் பெரிதும் வழிகோலுகிறது. வறுமை, பெற்றோரிழப்பு, தந்தையார் மதுபானத்திற்கு அடிமையாதல் போன்ற

எட்டு வயதுச் சிறுமி வீட்டில் சமையல், குடும்பச் பொறுப்பினைச் சுமக்கிறாள். வறுமையினால் படிப்பை இடைநிறுத்தும் சிறுவரில் பெண்பிள்ளைகளின் எண்ணிக்கை அதிகமாகவுள்ளது. அத்துடன், பெண்பிள்ளையின் கல்விப்பின்னடைவு அல்லது கல்வி இடைநிறுத்துதல் பற்றிக் கருத்தில் எடுக்காத தன்மையும் எமது சமூகத்தில் காணப்படுகிறது.



மத்தியதர வர்க்கத்துக்குக் கீழான குடும்பங்களில் இது வெளிப்படையான, பொதுவான நிகழ்வாக உள்ளது.

எல்லாக் காலங்களையும் தொலைத்து
'நம்பிக்கை' மீதே நம்பிக்கையிழந்து போக
சாகாவரம் பெற்றுவிட்டதாய்
கவலைகளும் கண்ணீரும்...

வலிமையான காரணங்கள் ஆண் - பெண் பாகு பாடின்றிப் பிள்ளைகளை இத்தொழில்களில் ஈடுபட வலியுறுத்துகின்றன.

வீட்டுவேலைகளில் சிறுபிள்ளைத் தொழிலாளர்கள் தேவைப்படும்போது - பெரும்பாலும் பெண்பிள்ளைகளே விரும்பப்படுகின்றார்கள். இயல்பாகவே துடுக்குத்தனம் குறைந்தவர்கள் அவர்கள். அதனால், சொன்ன வேலையைச் செய்துமுடிப்பதில் கவனமுடையவர்களாக அவர்கள் இருப்பார்கள். மேலும், ஆண்பிள்ளைகளோடு ஒப்பிடுகையில் - துணிவு குறைந்தவர்களாக இருப்பதில் சிறுதண்டனைகள் மூலம் பெரியளவு வேலை வாங்கமுடியும். இவ்வாறான சூழ்நிலையில் வறிய குடும்பங்களிலிருந்து பிள்ளைகள் - ஓரளவு பணவசதியான வீடுகளால் 'கொள்வனவு' செய்யப்படுகிறார்கள். பெரும்பாலான இடங்களில் பிள்ளையின் உணவு, உறைவிட, உடைத் தேவைகள் பூர்த்திசெய்யப்படுகின்றன. ஊதியம் வழங்கப்படினும், மிகக் குறைவான நிலையே காணப்படுகிறது. சில இடங்களில் - பின்னர் ஊதியம் வழங்குவதான வாக்குறுதியுடன் வேலை வாங்கப்படும். பிள்ளைகள் சில காலப் பகுதியின் பின்னர், தவறுகள் கண்டு பிடிக்கப்பட்டு, வீட்டைவிட்டு விரட்டப்படுகிறார்கள்.

வேறொரு வளமான குடும்ப அமைப்பினுள் வேலைக்காகப் புகும் பிள்ளை, தன்னளவில் மிகுந்த மனத்தாக்கத்திற்கு ஆளாகிறது. தன் வயதேயான வீட்டுக்கார அம்மாவின் மகள்- விழாக்காலங்களில் புத்தாடை பூணுகிறாள், குடும்பத்தவரோடு ஆடிப்பாடிக் களிக்கிறாள், கல்வி கற்கிறாள், ஓய்வு நேரங்களில் தொலைக்காட்சி பார்க்கிறாள். ஆனால், நாளின் மணித்தியாலங்கள் முழுவதும் வேலைகளால் நிரப்பப்பட்டுள்ள அவ்வீட்டின் வேலைக்காரச் சிறுமியின் நிலையை ஒருகணம் சிந்தியுங்கள். வாழ்வின் செழிப்பான பாகத்தைத் தினமும் பார்த்தபடி, தனக்குள் கருகிப்போகின்ற சின்னஞ்சிறுமிகளின் அவலம் உங்கள் நெஞ்சைத் தொடவில்லையா? மிக இரக்கமான, மிகப்பண்பான மனிதர்களாகச் சமூகத்திற்கு முகமூடியிட்டுள்ள எங்களின் எத்தனை பேரது வீடுகளில் இவ்வாறான வளராத தளிர்கள் கருக்கப்பட்டுக்கொண்டிருக்கின்றன? இவற்றை நாம் தெளிவாகச் சிந்தித்துப் பார்க்கவேண்டும்.

சிறுபிள்ளைகளைப் 'பெரிய' மனிதர்களின் வீடுகளில் வேலைக்குச் சேர்க்கும்போது, அப்பிள்ளைகளின் அவ்வீட்டு நல்வாழ்வைத் தொடர்ச்சியாகக் கண்காணித்துக் கொள்ளவேண்டிய பொறுப்பு - பிள்ளையின் பெற்றோருக்கு உண்டு, அவ் வீட்டுக்காரருக்கு உண்டு, அயல் வீட்டுக்காரருக்குக்கூட இப்பொறுப்பு உண்டு. ஏனெனில், வளரும் இளம் பிள்ளைகள், சமூகத்தின் இன்றியமையாத பாகமும் வளமும் ஆவார்கள். பிள்ளைப்பருவம் அழகிய வண்ணக் கனவுகளுக்குரியது, சுமைகளற்றது, சுதந்திரமானது, இயன்ற வரை கரங்கொடுங்கள். அவர்களின் இனிய கனவுகள் செழிப்பாய் மலர...

ச.சாரங்கா

# பால்மா கேக்



| | | |
|---|---|---|
| பால்மா | – | 1 பைக்கற் (400g) |
| கோதுமை மா | – | 1/2 kg |
| மாஜரீன் | – | 300 g |
| பேக்கிங் பவுடர் | – | 1மேசைக்கரண்டி |
| அப்பச்சோடா | – | 1 மேசைக்கரண்டி |
| சாதிக்காய்த்தூள் | – | 1 தேக்கரண்டி |
| தண்ணீர் | – | 2 ரம்ளர் |
| கஜு, பிளம்ஸ் | – | 100 g |
| சீனி | – | 1/2 kg |

**செய்முறை**

மாவுடன் பேக்கிங் பவுடர், அப்பச்சோடா ஆகியவற்றை மூன்று முறை அரித்துக் கொள்ளவும். பாத்திரத்தில் மாஜரினையும், சீனியையும் சேர்த்து நன்றாக அடித்துக் கொண்ட பின்பு, பால்மாவைச் சிறிது சிறிதாகத் தூவிச் சேர்த்துக்கொள்க. பின்பு இந்த அடித்த கலவைக்குள் தண்ணீரையும் சிறிதுசிறிதாக ஊற்றிக் கலந்துகொண்ட பின், அரித்து வைத்துள்ள கோதுமை மாவையும் சிறிது சிறிதாகத் தூவி, முழுவதையும் சேர்த்த பின் சாதிக்காய்த்தூள், கஜு, பிளம்ஸ் என்பவற்றையும் சேர்க்கவும். பின்னர் கேக் தட்டில் ஒயில் பேப்பர் விரித்து, மாஜரின் பூசிய பின்பு அடித்து வைத்துள்ள கலவையை ஊற்றி பேக் செய்யவும். ஆறியதும் எடுத்து வெட்டிப் பரிமாறலாம்.

# இளம்பெண்கள் எதிர்நோக்கும் மாதவிடாய் தொடர்பான பிரச்சினைகள்

01. **மாதவிடாய் என்றால் என்ன?**
இது பூப்படைந்த பெண்களுக்கு ஏற்படும் ஒரு சாதாரண உடற்தொழில் செயற்பாடாகும். இதன்போது சிறிதளவு குருதியும் வேறு பதார்த்தங்களும் வெளியேற்றப்படுகின்றன.

02. **சாதாரணமாக மாதவிடாய் எவ்வளவு நாட்களுக்கு ஒருமுறை ஏற்படும்?**
21-35 நாட்களுக்கு ஒரு முறை ஏற்படலாம்.

03. **மாதவிடாய் எவ்வளவு தினங்களிற்கு நீடிக்கலாம்?**
முதலாம் தினத்திலிருந்து ஏழு தினங்கள்வரை வேறுபடலாம்.

04. **குருதி மிகையாக வெளியேறுகிறதா என எவ்வாறு தீர்மானிக்கலாம்?**
1. வழமையாகக் குருதி இழப்பு ஏற்படும் தினங்களைவிட நீடித்தல்.
2. குருதியுடன் சேர்ந்து குருதிக் கட்டிகளும் வெளியேறுதல்.
3. நாளாந்தச் செயற்பாடுகள் தடைப்படுதல்.
4. தூக்கம் தடைப்படுதல்.

05. **குருதி மிகையாக வெளியேறுவதனால் ஏற்படும் விளைவு யாது?**
குருதிச்சோகை

06. **மாதவிடாய்க் காலத்தில் வயிற்றுநோ ஏற்படுவது பாதகமானதா?**
இல்லை.

07. **மாதவிடாய்க்கு முன் ஏற்படும் உடல், உள நிலை மாற்றங்கள் வழமையானவையா?**
ஆம்.

08. **மாதவிடாயின்போது ஏற்படும் வயிற்று வலிக்கு நிவாரணம் உண்டா?**
ஆம். பல்வேறுபட்ட வலி நிவாரண மாத்திரைகள் வைத்திய ஆலோசனைப்படி எடுத்துக் கொள்ளலாம்.

09. **மாத்திரைகள் எடுக்கும் போது கவனிக்க வேண்டியவை யாவை?**
வலி நிவாரண மாத்திரைகளை உணவு உட்கொண்ட பின் உள்ளெடுத்தல் வேண்டும்.

10. **மாதவிடாயின் போது கடினமான வேலைகள், உடற்பயிற்சி செய்யலாமா?**
ஆம். நீங்கள் செய்யும் எந்த வேலைகளையும் செய்யலாம். ஓடுதல், உயரம் பாய்தல் என்பனவும் தீங்கற்றவையாகும்.

11. **மாதவிடாய்க் காலங்களில் ஏதாவது உணவுகள் தவிர்க்கப்பட வேண்டுமா?**
இல்லை.

12. **மாதவிடாய்க் காலங்களில் மட்டும் சத்துள்ள உணவுகள் உட்கொண்டால் போதுமா?**
இல்லை. நாளாந்தம் சத்துள்ள உணவுகள் உட்கொள்ளப்பட வேண்டும்.

13. **மாதவிடாய் தடைப்படுதல், வழமையான கால இடைவெளிகளில் மாற்றம் ஏற்படுதல் என்பன நோய் அறிகுறிகளா?**
கர்ப்பம் தரித்த பின் மாதவிடாய் தடைப்படுகிறது. இது தவிர, வழமையான கால இடைவெளிகளில் மாற்றம் ஏற்படுதல், மாதவிடாய்க்கு இடைக்காலத்தில் ஒழுங்கற்று ஏற்படும் குருதி இழப்பு கவனத்திற்குரிய விடயமாகும். ஆனால், மாதவிடாய் நடுக்காலத்தில் (15 ஆம் நாள்) வழமையாக ஏற்படும் குருதி இழப்பு சாதாரணமானதாகும்.

14. **மாதவிடாய்க் காலங்களில் பப்பாசிப்பழம் சாப்பிடக்கூடாதா? விளாம்பழம் அதிகளவு சாப்பிட்டால் மலட்டுத் தன்மை உண்டாகுமா?**
இவை மருத்துவரீதியாக நிரூபிக்கப்படாத பொய்யான கருத்துகளாகும்.

15. **பதினேழு வயது வந்த பின்பும் பருவமடையாதிருப்பதற்கான காரணம் யாது?**
பதினாறு வயதின் மேலும் பருவமடையாதிருப்பின் வைத்தியரின் உதவியை நாடவும்.

16. **மாதவிடாயின்போது குருதி குறைவாக வெளியேறுவது பற்றிய கருத்து என்ன?**
குருதி குறைவாக வெளியேறுதல் ஒரு பிரச்சினை அல்ல.
இதன்போது அழுக்கு இரத்தம் வெளியேறுகிறது எனக் கருதுகிறார்கள். இது தவறான கருத்தாகும். மாதவிடாயின்போது வெளியேறும் குருதி சாதாரண குருதிபோல் சுத்தமானதாகும்.

வைத்திய கலாநிதி திருமதி G.பவானி
பெண்நோயியல், மகப்பேற்று
வைத்திய நிபுணர்

நமது ஈழநாடு

267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanadu.com

சிந்தனைக்கு

வான்உயர் தோற்றம் எவன்செய்யும் தன்நெஞ்சம்
தான்அறி குற்றப் படின்.

- திருக்குறள்.

# நமது நோக்கு

## பயனேதுமற்ற கவலை!

ரோக்கியோவில் நடைபெறவிருக்கின்ற உதவி வழங்கும் நாடுகளின் மாநாட்டுக்கு விடுதலைப் புலிகள் செல்ல வேண்டும் என அமெரிக்கா விரும்புவதாகவும், ரோக்கியோ மாநாட்டைப் பகிஷ்கரிக்கும் விடுதலைப் புலிகளின் முடிவு தனது கவனத்தைத் தொட்டுக் கவலை தருவதாகவும் அமெரிக்க இராஜாங்கச் செயலர் கிறிஸ்ரீனா ரொக்கா கூறியிருக்கிறார்.

கொழும்புக்கு விஜயம் மேற்கொண்டு ஜனாதிபதி, பிரதமர், முக்கிய அமைச்சர்கள் உட்படப் பலரைச் சந்தித்த அவர் தனது பயணம் பற்றிய செய்தியாளர் மாநாட்டில் அவர் தெரிவித்திருக்கும் இக்கருத்துக்கள் - அமெரிக்க அரசாங்கத்தின் நிலைப்பாட்டை வெளிப்படுத்தும் அதேவேளை -

பிரச்சினையின் ஆழத்தை, அதன் யதார்த்தத்தை அமெரிக்கா உணராத போக்கையும் எடுத்துக் காட்டுவதாகவே கருதமுடிகின்றது.

ரோக்கியோ உதவி வழங்கும் மாநாட்டை பொறுத்தளவிலோ, சமாதானப் பேச்சுக்களைப் பொறுத்த வரையிலோ - விடுதலைப் புலிகள், அவற்றில் பங்கு கொள்ளப்போவதில்லை என்ற நிலைப்பாட்டிற்கு வருவதற்கான அடிப்படைக் காரணிகளைப் புரிந்து கொள்ளாமல் - அல்லது, புரிந்து கொண்டும் - அவற்றை வெளிப்படுத்தாமல் -

வெறுமனே, பேச்சுக்களுக்குப் புலிகள் வருவதை விரும்புவதாக மட்டும் கூறப்படும் கருத்துக்கள் - தற்காலிகமாகப் பேச்சுக்களிலிருந்து ஒதுங்குவதற்கு விடுதலைப் புலிகள் முன்வைத்த காரணங்களை கவனத்திற் கொள்ளாததாகவும், புலிகள் மீது அழுத்தத்தைப் பிரயோகித்து - அவர்களைப் பேச்சுக்களில் பங்கேற்கச்செய்யும் தன்மை கொண்டதுமாகவே காணப்படுகின்றன.

இது, அமெரிக்கா தனது தரப்பிலிருந்து பிரச்சினையை நோக்கும் முயற்சியன்றி, தமிழ்மக்கள் எதிர்நோக்கும் சுமுகவாழ்வுக்கான முட்டுக்கட்டைகளோ, தொடரும் இராணுவ அழுத்தங்களோ தொடர்பாக பார்வையைச் செலுத்த விரும்பாத போக்கைத்தான் காட்டுகின்றது.

நிதியுதவி மாநாட்டில் - விடுதலைப் புலிகளின் பங்கேற்பை விரும்பினால் - அமெரிக்கா எடுத்திருக்கக் கூடிய நடவடிக்கைகள் மூலம், அத்தகைய வாய்ப்பு உறுதி செய்யப்பட்டிருக்கக்கூடிய சந்தர்ப்பங்கள் இருக்கவே செய்தன.

உதவி வழங்கும் நாடுகளின் மாநாட்டிற்கு முன்னோடியாக - வொஷிங்ரனில் நடாத்தப்பட்ட மாநாட்டில் விடுதலைப் புலிகளை அழைக்காமலும், அதற்குத் தமது தரப்பிலிருந்து நியாயம் கூறிக்கொண்டும் செயற்பட்ட அமெரிக்கா - உண்மையில் இலங்கையின் சமாதான முயற்சிகளுக்கு ஆக்கபூர்வமாக உதவ முயன்றிருந்தால் - விடுதலைப் புலிகளை வொஷிங்ரனுக்கு அழைத்திருக்க முடியும், அல்லது மாற்று ஒழுங்குகளுக்கு ஒத்துழைத்திருக்க முடியும்.

போர் பாதித்த பகுதிகளில் விடுதலைப் புலிகளின் பங்கேற்பின்றி, புனர்வாழ்வு - புனரமைப்பு நடவடிக்கைகளைச் செய்ய முடியுமா என்ற யதார்த்தத்தையும் கடந்து - திட்டமிட்ட ரீதியில் அமெரிக்கா - விடுதலைப் புலிகளை அழைக்காதிருந்தது.

விடுதலைப் புலிகள் தற்காலிகமாகப் பேச்சுக்களிலிருந்து விலகவும் இது முக்கிய காரணமானது.

இது இவ்வாறிருக்க, வட-கிழக்கில் சுமுகநிலையைத் தோற்றுவிப்பதில், விடுதலைப் புலிகளின் நியாயமான கோரிக்கைகளை, எதிர்பார்ப்புக்களை நிறைவேற்றித் தருவதற்கு ஏற்ற அழுத்தத்தை அமெரிக்கா, இலங்கை அரசாங்கத்தின் மீது செலுத்தவும் வாய்ப்புக்களும் இருந்தன / இருந்து வருகின்றன.

ஆனால் - இவற்றையெல்லாம் புறந்தள்ளி ,மறந்து - ஒப்புக்காக கதைப்பதுபோல - ரோக்கியோ மாநாட்டுக்குப் புலிகள் வருவதை விரும்புவதாக அமெரிக்கா சொல்லமுயல்வது - வேடதாரியின் செயலுக்குச் சமனானதாகும்.

ரோக்கியோ மாநாட்டுக்குப் புலிகளும் பங்கேற்க வேண்டும் என உண்மையில் உளப்பூர்வமாக விரும்பினால் - அமெரிக்கா செய்திருக்க வேண்டியவையும், செய்ய வேண்டியவையும் நிறைய இருக்கின்றன என்பதுடன் - விடுதலைப்புலிகள் குறித்த நிலைப்பாட்டிலுள்ள தவறான பார்வையை அந்நாடு மீளாய்வு செய்ய வேண்டியும் உள்ளது என்பதை கிறிஸ்ரீனா ரொக்கா போன்றோர் உணர்ந்துகொள்ள வேண்டும்.

# சங்கானை பிரதேச செயலர் பிரிவில் சூறாவளி சேத மதிப்பீட்டுப் பணிகள்

## சிறுவர் கல்விக்கும் பால்நிலை அபிவிருத்திக்குமான நிறுவனம் ஏற்பாடு

(அராலி)

மினி சூறாவளியினால் ஏற்பட்டுள்ள சேதங்கள் பற்றிய மதிப்பீட்டினை - சங்கானைப் பிரதேச செயலர் பிரிவில் உள்ள சிறுவர் கல்விக்கும், பால்நிலை அபிவிருத்திக்குமான நிறுவனம் மேற்கொண்டு வருகிறது. திட்டக் கிராமங்களிலுள்ள கிராம ஊக்குவிப்பாளர்கள் ஊடாகவே இப்பணி மேற்கொள்ளப்பட்டுவருகின்றது.

இதன் அடிப்படையில் திட்டக்கிராமங்களான - அராலி தெற்குத் துறைமுகத்தடி, ஐயனார் கோவிலடி, அராலி மத்தி, ஊரத்தி, அராலி கிழக்கு வாழையம்மன் கோவிலடி, மடத்தடி, நாச்சிமார் கோவிலடி, அராலி வடக்கு நம்பாப்புலம், சங்கானை ஓடக்கரை, பாரதிவீதி, வட்டுக்கோட்டை முதலி கோவிலடி, செம்பாட்டாந்தோட்டம், துணைவி, சுழிபுரம் கல்விளான், மூளாய்ப் பிள்ளையார் கோவிலடி, திக்கரை, வீராவத்தை முங்கொடை, பெரியபுலோ, கலைவாணி, பொன்னாலை, தொல்புரம் மத்தி போன்ற கிராமங்களில் இழப்பீடு பற்றிய சேத மதிப்பீடுகளைச் செய்துவருவதாக நிறுவன செயற்திட்ட இணைப்பாளர் எஸ்.திருக்குமரன் தெரிவித்தார்.

இந்த மதிப்பீட்டின்படி கரையோரக் கிராமங்களான அராலி தெற்கு துறைமுகத்தடி, மூளாய்ப் பிள்ளையார் கோவிலடி போன்ற இரு இடங்களில் அதிக சேதங்கள் ஏற்பட்டுள்ளன எனத் தெரியவருகிறது. (118)

# மண்கும்பான் கடற்கரையில் இளைஞர் குழுக்கள் மோதல்

(மண்கும்பான்)

மண்கும்பான் - சாட்டி கடற்கரையில் இரண்டு குழுக்களுக்கிடையில் ஏற்பட்ட மோதலில், இரு இளைஞர்கள் கத்திக் குத்துக்கு இலக்காகிக் காயமடைந்துள்ளனர்.

சாட்டிக்கு, விடுமுறையைக் கழிக்க வந்த இளைஞர்களுக்கும், மண்கும்பான் பகுதியைச் சேர்ந்த இளைஞர்களுக்கும் இடையிலேயே இந்த மோதல் ஏற்பட்டது. பெண்கள் குளித்துக் கொண்டிருந்த பகுதிக்குள் விடுமுறையைக் கழிக்க வந்த இளைஞர்கள் சிலர் புகுந்து சேஷ்டை புரிந்தபோது, அதைத் தட்டிக் கேட்டபோதே இந்த மோதல் உருவானது.

இத்தகைய மோதல் சம்பவங்கள் அண்மைக்காலமாக அதிகரித்திருப்பது குறித்து இப்பகுதி மக்கள் கவலையடைந்துள்ளனர். இத்தகைய சம்பவங்கள், தொடராமல் இருக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் எனவும் அவர்கள் கோரியுள்ளனர்.

இந்த மோதலில் மண்கும்பானைச் சேர்ந்த பிரதீபன் (வயது 26), சதீஷ் (வயது 20) ஆகியோர் கத்திக்குத்துக் காயங்களுக்கு இலக்காகினார். (53)

# ஆசிரியர் சம்பள உயர்வுக்கு புதிய நடைமுறை அமுல்!

(பண்டத்தரிப்பு)

ஆசிரியர்களுக்கான வருடாந்த சம்பள உயர்வில் இவ்வருடம் முதல் புதிய நடைமுறை செயற்படுத்தப்படவுள்ளது.

மனிதவள அபிவிருத்தி கல்வி பண்பாட்டலுவல்கள் அமைச்சு, புதிய சம்பளவுயர்வு நடைமுறை குறித்து வலயக்கல்விப் பணிப்பாளர்கள் ஊடாகப் பாடசாலை அதிபர்களுக்கு தெரியப்படுத்தியுள்ளது.

புதிய நடைமுறை இவ்வருடம் முதல் செயற்படுத்தப்படும் எனவும், இவ்வருட ஜனவரி மாதத்திலிருந்து ஆசிரியர் செயலாற்றுகை தரங்கணிப்பு ஆவணங்களின் அடிப்படையிலேயே ஆசிரியர்களின் வருடாந்த சம்பள அதிகரிப்பு வழங்கப்படும் எனவும் கல்வியமைச்சு அறிவித்துள்ளது.

இது தொடர்பாக இவ்வருடத்துக்குரிய சம்பள அதிகரிப்பு விண்ணப்பப்படிவங்களுடன், சம்பந்தப்பட்ட ஆசிரியர்களின் 2002 ஆம் ஆண்டுக்கான ஆசிரியர் செயலாற்றுகைத் தரங்கணிப்பு படிவங்களையும் இணைத்துச் சமர்ப்பிக்குமாறு பாடசாலை அதிபர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. (43)

# சகல பொலிஸ் நிலையங்களிலும் தமிழ் மூல முறைப்பாட்டுப் பிரிவு

(கொழும்பு)

நாட்டிலுள்ள சகல பொலிஸ் நிலையங்களிலும் தமிழில் முறைப்பாடுகளைக் கையேற்கும் பிரிவு கடந்த செவ்வாய்க்கிழமை முதல் செயற்படத் தொடங்கியிருப்பதாகப் பொலிஸ் திணைக்களம் அறிவித்துள்ளது.

இது தொடர்பாகப் பிரதிப் பொலிஸ்மா அதிபர் காமினி ரந்தெனிய - பொலிஸ் தலைமையகத்தில் இடம்பெற்ற செய்தியாளர் மாநாட்டில் அறிவித்தார்.

# மாணவர்களின் கல்வி வளர்ச்சியில் பெற்றோர்களுக்கே அதிகமான பங்கு!

## பாடசாலை அபிவிருத்திச் சங்க கூட்டத்தில் உரை

மாணவர் கல்வி வளர்ச்சியில் ஆசிரியர்களின் பணி முக்கியமானதென்றாலும், அதனைவிடப் பெற்றோரின் பங்களிப்புமிக மிக முக்கியமானது என மட்டுவில் வடக்கு சந்திரமௌலீச வித்தியாலய பாடசாலை அபிவிருத்திச் சங்கக் கூட்டதில் உரையாற்றிய பாடசாலை அதிபர் செ.சிவஞானம் தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில்,

மாணவர்கள் ஒரு நாளில் 6 மணித்தியாலங்கள் மட்டுமே பாடசாலையில் ஆசிரியர்களுடன் உள்ளனர். மீதி 18 மணித்தியாலங்களும் பெற்றோருடனேயே உள்ளனர். இக்காலப்பகுதியில் மாணவர்களைப் படிப்பதற்குத் தூண்டும் வகையில் பெற்றோர் செயற்படல் வேண்டும்.

பாடசாலையில் கற்ற கல்வியை வீட்டில் மீட்பதற்குப் பெற்றோர் உதவுதல் மட்டுமன்றி, படிப்பதற்கு உரிய சூழலையும் ஏற்படுத்திக் கொடுத்தல் வேண்டும். வானொலி கேட்டல், தொலைக்காட்சி பார்த்தல் என்பன பொது அறிவை வளர்க்கும். எனினும், படிக்கும் நேரத்தில் இதனைக் கட்டுப்படுத்திக்கொள்ளல் பெற்றோரின் பணியாக இருக்கவேண்டும்.

தமது பிள்ளைகளுக்குச் சத்தான உணவு வகைகளைக் கொடுத்து, உரியநேரத்திற்குப் பாடசாலைக்கு அனுப்புதல் வேண்டும். அப்போதுதான் பிள்ளைகள் சோர்வின்றி, பிற சிந்தனைகள் இன்றி தமது கல்விப் பணியைத் தொடரமுடியும்.

எமது பிரதேச மக்கள் - யுத்தம் மற்றும் இடப்பெயர்வின் ஆறாவடுக்களைச் சுமந்து நின்றாலும், தமது பிள்ளைகளை எப்பாடுபட்டாவது படிப்பித்து நல்லநிலைக்குவரச் செய்ய வேண்டும் எனப் பெற்றோர் கொண்டுள்ள ஆர்வமானது, பாராட்டப்பட வேண்டியதாகும். அவர்கள் பாடசாலைப் படிப்போடு மட்டும் நின்றுவிடாது, வீட்டிலும் பிள்ளைகளைப் படிப்பதற்கு ஊக்கப்படுத்தினாலேயே முழுமையான பயனைப்பெறமுடியும் எனக் குறிப்பிட்டார். (24)

# நோயுற்ற இராணுவச் சிப்பாய்க்கு பணம் கொடுத்து உதவிய போராளி

(அரியாலை)

யாழ்.போதனா வைத்தியாசாலையில் சிகிச்சைபெற்று வந்த இராணுவச் சிப்பாய் ஒருவர், தென்பகுதியில் உள்ள தனது உறவினருடன் தொலைபேசியில் தொடர்புகொண்டு கதைப்பதற்காகப் பணம் இல்லாது தவித்தவேளை, அவரின் நிலையைக்கண்டு இரக்கம்கொண்ட அதேவார்ட்டில் சிகிச்சை பெற்றுவந்த போராளி ஒருவர் பணத்தைக் கொடுத்து உதவினார்.

29 ஆம் வாட்டில் மேற்படி சம்பவம் கடந்த 12 ஆம் திகதி திங்கட்கிழமை இடம்பெற்றது. மேற்படி போராளி குறிப்பிட்ட இராணுவவீரர் பசியுடன் இருந்தவேளை, அவர் கடையில் சென்று உணவு உண்பதற்கும் பணம் கொடுத்து உதவியதாகவும் தெரியவருகிறது. (55)

# ஈவினை, புன்னாலைக்கட்டுவனில் மீண்டும் பரவும் பாதீனியம் களை!

(புன்னாலைக்கட்டுவன்)

ஈவினை, புன்னாலைக்கட்டுவன் பகுதிகளில் மீண்டும் பாதீனியம் வேகமாகப் பரவிவருகின்றது. இதனால், மனிதர்கள் மற்றும் கால்நடைகளுக்கு நோய்கள் ஏற்படும் அபாயம் இருப்பதாக விவசாய விரிவாக்கப் பகுதியினர் தெரிவித்தனர்.

பாதீனியத்தின் விதைகளின் ஆயுட்காலம் அதிகம் என்பதால், தாவரம் பூக்கும் முன்னரே அழிக்கவேண்டும். பாதீனியம் ஒழிப்புக்காக விவசாயத்திணைக்களத்தினால் ஒதுக்கப்பட்ட நிதி முடிவடைந்து விட்டதாகவும், இதனால் பாதீனியம் ஒழிப்பு நடவடிக்கைகளைத் தொடர்ந்து மேற்கொள்ள முடியாதிருப்பதாகவும் விவசாய விரிவாக்க அதிகாரிகள் தெரிவித்தனர்.

அத்துடன், இப்போதும் பாதீனியம் ஒழிப்புத் தொடர்பாகப் பொதுமக்களுக்கு ஆலோசனைகள் வழங்கப்படுகின்றன. முன்னர் பாதீனியக் களைகளை அழிக்கும் நடவடிக்கையில் விவசாயத்திணைக்கள அதிகாரிகள் ஈடுபட்டபோது, பொதுமக்கள் பூரணமாக ஒத்துழைக்கவில்லை. இதனாலேயே பாதீனியக் களைகளைத் தம்மால் முற்றாகக் கட்டுப்படுத்த முடியாத நிலை ஏற்பட்டதாக விவசாயத் திணைக்கள அதிகாரிகள் மேலும் தெரிவித்தனர். (83)

# பிரதேச வளங்களைப் பயன்படுத்தி தேவைகளை பூர்த்திசெய்ய வேண்டும்

## காரைநகர் சமுர்த்தி வங்கித் திறப்பு விழாவில் அரச அதிபர்

கிராமப்புற மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்யத்தக்க வகையில் அந்தந்தப்பிரதேச வளங்கள் முழுமையாகப் பயன்படுத்தப்பட வேண்டும். எதிர்காலத்தில் கிராமங்களில் வாழும் மக்கள் தமது அத்தியாவசியத் தேவைகளை நிறைவேற்ற நகர்ப்புறங்களை நாடிச்செல்லும் நிலை மாறவேண்டும்.

- இவ்வாறு காரைநகரில் நடைபெற்ற சமுர்த்தி வங்கித் திறப்பு விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரைநிகழ்த்திய யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் செ.பத்மநாதன் குறிப்பிட்டார்.

காரைநகர் உதவி அரசாங்க அதிபர் வே.சாம்பசிவம் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில், அரசாங்க அதிபர் தொடர்ந்து உரையாற்றுகையில் -

1991 இல் ஏற்பட்ட இடப்பெயர்வினால் காரைநகர்ப் பிரதேசம் - விவசாயம், கைத்தொழில் போன்ற துறைகளில் பெரிதும் பாதிப்படைந்துள்ளது. பல வீடுகள் சேதமடைந்துள்ளன. இவற்றைப் புனரமைத்து காரைநகரில் முழுமையாக மக்கள் குடியேறத்தக்கவாறு பல அபிவிருத்தித் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

முதற்கட்டமாகக் காரைநகர் தனியான உதவி அரசாங்க அதிபர் பிரிவாக மாற்றப்பட்டுள்ளது. இங்கு சமுர்த்தி வங்கிச் சங்கமும் திறக்கப்பட்டுள்ளது.

குடிநீர், மின்சாரம் போன்ற வசதிகள் முழுமையாகச் செய்யவேண்டியுள்ளது. மக்கள் எல்லோரும் இங்கு வந்து மீளக்குடியேறி, அபிவிருத்தித் திட்டங்களில் பங்கேற்க வேண்டும் எனக் கேட்டுக்கொண்டார்.

இந்து சமய விவகார அமைச்சர் தி.மகேஸ்வரன் நாடாவை வெட்டி சமுர்த்தி வங்கிச் சங்கத்தைத் திறந்து வைத்தார். யாழ்.மாவட்ட பிரதித் திட்டமிடல் பணிப்பாளர் என்.சிவபாதசுந்தரம், யாழ்.சமுர்த்தி உதவி ஆணையாளர் எஸ்.மகேஸ்வரகுமார் உட்பட மற்றும் பலர் உரைநிகழ்த்தினர்.

# சாரதி அனுமதிப் பத்திரப் பரீட்சை மீண்டும் ஞாயிறு முதல் ஆரம்பம்

யாழ்.செயலகத்தில் மோட்டார் வாகனப் போக்குவரத்துத் திணைக்களத்தின் சாரதி அனுமதிப்பத்திரம் வழங்குவதற்கான பரீட்சைகள் மீண்டும் நாளைமறுநாள் முதல் நடைபெறவுள்ளன.

அனுமதிப் பத்திரம் வழங்குவதற்கான எழுத்துப் பரீட்சை மற்றும் செய்முறைப் பரீட்சை ஆகியன நாளைமறுதினம் ஆரம்பமாகி எதிர்வரும் 30 ஆம் திகதி வரையும் நடைபெறவுள்ளதாகப் போக்குவரத்துத் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன. (43)

# மீசாலை மகா வித்தியாலய கட்டடங்கள் புனரமைப்பு

மீசாலையிலுள்ள விக்கினேஸ்வரா மகா வித்தியாலயத்தின் இரு கட்டடங்களையும், மலசல கூடத்தினையும் ஜி.ரி.இசற் நிறுவனம் மிகவும் சிறந்தமுறையில் புனரமைத்துக் கொடுத்துள்ளது.

இதனால், தரம் 5 இற்கு உட்பட்ட மாணவர்களுக்கான கட்டடத் தேவையின் ஒரு பகுதியைப் பாடசாலை பூர்த்திசெய்துள்ளதாக ஆசிரியர்கள் தெரிவித்தனர். எனினும், இங்கு தளபாடப் பற்றாக்குறை தொடர்ந்து நிலவிவருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (37)

# திருத்தப்படாத வீதியால் பொதுமக்களுக்கு சிரமம்

(நுணாவில்)

நுணாவில் சந்தியிலிருந்து கனகன்புளியடி, வேம்பிராய் ஊடாக மீசாலை - புத்தூர்ச் சந்திவரை செல்லும் பிரதான வீதி மிகவும் பழுதடைந்தநிலையில் காணப்படுகிறது. இந்த வீதியில் ஆங்காங்கு பாரிய குழிகள் காணப்படுவதுடன், வீதியோரத்தில் இரு பக்கமும் பற்றைகள் மூடி வளர்ந்துள்ளன. இதனால் திருடர் பயம், பாம்பு போன்ற விஷ ஜந்துகளின் பயத்துடன் மக்கள் பயணத்தை மேற்கொள்கின்றனர்.

போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான 794 ஆம் இலக்கப் பேரூந்தும், தனியார் சிற்றூர்தியும் இவ்வழியாகச் சேவையில் ஈடுபட்டு வருகின்றன, இந்த வீதி திருத்தப்படாதது குறித்து இப்பகுதி மக்களும், இப்பாதையால் பயணஞ்செய்யும் மக்களும் விசனம் தெரிவித்துள்ளனர். (24)

## விடியோ படக்காட்சி

(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக்கழக புறநிலைப் படிப்புக்கள் அலகு வழங்கிவரும் திரைப்படக் காட்சித் தொடரில் பரதனின் "ஆவாரம் பூ" எனும் திரைப்படம் நாளை மறுநாள் ஞாயிற்றுக் கிழமை காலை 10 மணிக்குப் புவியற்துறை மண்டபத்தில் காண்பிக்கப்படவுள்ளது. ஆர்வலர்கள் எவரும் கலந்துகொண்டு பயன்பெறலாம் எனப் புறநிலைப்படிப்புக்கள் அலகின் இணைப்பாளர் தெரிவித்துள்ளார்.

# தமிழீழ மாணவர் எழுச்சி நாளை முன்னிட்டு கட்டுரை, ஓவியப் போட்டிகளுக்கு ஏற்பாடு!

தமிழீழ மாணவர் எழுச்சிநாளை முன்னிட்டு மாணவர்களுக்கிடையேயான கட்டுரை, ஓவியப்பேர்ட்டிகளுக்குத் தமிழீழ மாணவர் அமைப்பு ஏற்பாடு செய்துள்ளது.

தமிழீழ தேசிய உருவாக்கத்தில் மாணவர்களின் பங்களிப்பு, எதிர்காலத் தமிழீழ பொருண்மியம், நவீன அறிவியல் வளர்ச்சியில் எமது எதிர்காலம் ஆகிய விடயப்பரப்புக்களில்- கட்டுரை, ஓவியம் ஆகிய போட்டிகளில் மாணவர்கள் பங்குபற்றலாம்

மேற்பிரிவுப் போட்டியில் தரம் 12, 13 மாணவர்களும் - மத்திய பிரிவில் தரம் 9, 10, 11 மாணவர்களும் - கீழ்ப்பிரிவில் தரம் 8 மற்றும் அதற்குக் கீழ் கல்விகற்கும் மாணவர்களும் பங்குபற்றலாம். அனைத்துப் பிரிவுகளுக்கும் விடயத்தலைப்புப் பொதுவானதாகும்.

கட்டுரைப்போட்டி - மேற்பிரிவு, மத்தியபரிவு என்பவற்றுக்கு மட்டும் நடைபெறும். மேற்பரிவு - 500 சொற்களுக்குக் குறையாமலும், மத்திய பிரிவு - 300 சொற்களுக்குக் குறையாமலும் இருத்தல்வேண்டும்.

போட்டிகள் யாவும், பாடசாலை மட்டத்தில் - அப்பாடசாலை அதிபரின் ஒழுங்குபடுத்தலில் நடைபெறும். பாடசாலை மட்டத்தில் முதல் மூன்று இடங்களையும் பெறும் ஆக்கங்கள் கோட்டமட்டத்தின் தெரிவுக்காக அனுப்பிவைக்கப்படும்.

கோட்டத்தில் தெரிவாகும் ஆறு ஆக்கங்கள் வலய்மட்டப் போட்டிக்கு அனுப்பிவைக்கப்படும். வலயமட்டத்தில் தெரிவாகும் ஆறு ஆக்கங்கள் மாவட்ட மட்டத்திற்குத் தெரிவு செய்யப்படும். மாவட்ட மட்டத்தில் தெரிவாகும் மாணவர்களுக்குச் சான்றிதழும், முதல் மூன்று இடங்களைப் பெறும் மாணவர்களுக்குச் சிறப்பு பரிசில்களும் வழங்கப்படும். வலய மட்டத்தில் தெரிவான மாணவர்களின் ஆக்கங்களிலிருந்து தேசிய மட்டத்தில் மூன்று ஆக்கங்கள் தெரிவு செய்யப்பட்டு, அவற்றுக்குப் பெறுமதி மிக்க பரிசில்களும், சான்றிதழ்களும் வழங்கப்படும்.

பாடசாலை மட்டப்போட்டிகள் எதிர்வரும் 25 ஆம் திகதிக்குள் நடத்தி முடிக்கப்பட்டு, தெரிவான ஓவியங்களை 26 ஆம் திகதிக்கு முன்னர் கோட்டப் பணிமனைக்கு அனுப்பி வைக்குமாறு தமிழீழ மாணவர் அமைப்பு வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறப்பட்டுள்ளது.

# பேணிப் பாதுகாக்கப்பட வேண்டிய மயானங்கள் கவனிப்பற்ற நிலையில்

"சமரசம் உலாவும் இடமே, நம் வாழ்வில் காணா சமரசம் உலாவும் இடமே...."- இது, கவிஞர் கண்ணதாசனின் அற்புதவரிகள். என்றும் செவிகளில் ஒலித்துக்கொண்டிருக்கும் காலத்தால் அழியாத கானம் அது. ஆடிப் பாடித்திரிந்த மனிதன், இறுதியில் நிம்மதியாக, நிரந்தரமாகத் தூங்குகின்ற இடம் இடுகாடு என்பதனைக் கண்ணதாசன் தனது தத்துவ வரிகள் மூலம் வெளிப்படுத்திவிட்டார். ஆம்- சுடுகாடுகளும், இடுகாடுகளும் (கல்லறைத் தோட்டங்கள்) உண்மையிலேயே பேணிப் பாதுகாக்கப்பட வேண்டியவை மட்டுமல்ல, பூஜிக்கப்படவும் வேண்டியவையும்கூட. இந்த சுடுகாடுகளும், இடுகாடுகளும் நினைவுச் சின்னங்கள் என்றால் - அதுகூட மிகையில்லை.



இவ்வாறு பேணிப் பாதுகாக்கப்பட வேண்டிய சுடுகாடுகளும், இடுகாடுகளும் வடமராட்சிப் பகுதியில் மிகமோசமான நிலையிலுள்ளன. அவை இன்று குப்பைகள், கூழங்கள் கொட்டப்படும் இடங்களாகவும், கால்நடைகள் இறைச்சிக்காக வெட்டப்படும் இடங்களாகவும் காணப்படுகின்றன.

அதாவது, இவ்விடங்களின் புனிதத் தன்மையையும், மகத்துவத்தினையும் உணர்ந்தோ, உணராமலோ அந்த இடங்கள் அருவருக்கத்தக்க இடங்களாகவும், வெறுப்புக்குரிய இடங்களாகவும் மாற்றப்பட்டுக் கொண்டிருக்கின்றநிலையை எண்ணி வெட்கித் தலைகுனிய வேண்டியவர்களாகவேயுள்ளோம்.

இதனைவிடச் சுடுகாடுகளிலும், இடுகாடுகளிலும் எம்முன்னோர்களால் பேணி வளர்க்கப்பட்ட நிழல்தரு மரங்கள்கூட இன்று விறகுக்காகவும், ஏனைய தேவைகளுக்காகவும் வெட்டி அழிக்கப்படுகின்ற நிலைமையானது - பொதுநலன் என்பது எம்மிலிருந்து எவ்வளவு தூரம் அருகி வருகின்றது என்பதனையும், சுயநலம் நன்கு வேரூன்றுவதையுமே காட்டுகின்றன.

எம்முன்னோர்கள் தூரநோக்குடன் தமது சந்ததியினருக்காக வளர்த்த இந்த மரங்கள் - உரிய பலனைத் தரும்வேளையில் இவ்வாறு அழிக்கப்படுவதானது - எமது சமூகத்துக்கே செய்யும் துரோகத்தனம் என்பதை ஒவ்வொருவரும் நன்கு உணர்ந்துகொள்ள வேண்டும்.

எத்தனையோ புகழ்பூத்த அறிஞர்களும், சமூகப் பெரியோர்களும், சமூகத் தொண்டர்களும் அடக்கம் செய்யப்பட்ட இந்த இடங்களைப் பற்றிப் பெருமை பேசும் நாம், அந்த இடங்களின் கவலைக்குரிய நிலையை உணராது இருப்பது வேதனைக் குரியது.

இடுகாடுகளில் அமைக்கப்பட்ட மடங்கள் இன்று புனரமைக்கப்படாமல், கவனிப்பாரற்று அழிவடைந்து கொண்டிருக்கின்றன. இதுபற்றி உரியவர்களும் இங்கு அக்கறை கொள்வதாக இல்லை என மக்கள் குற்றம் சுமத்துகிறார்கள்.

அங்குள்ள குளம் அல்லது கிணறுகள் பராமரிக்கப்படுவதில்லை. இதனால், ஈமக்கிரியைகளைச் செய்பவர்கள் பலத்த சிரமங்களை எதிர்கொள்கின்றார்கள். இவ்வாறு வடமராட்சிப் பகுதியிலுள்ள பல இடுகாடுகள் பராமரிப்பின்றி இருப்பதாக இதில் அக்கறையுள்ள பலர் சுட்டிக் காட்டுகின்றனர்.

அதுமட்டுமல்ல, வடமராட்சிப் பகுதியில் முன்னோர்களால் கடைப்பிடிக்கப்பட்டுவந்த சில நல்ல அந்திமக்கிரியை முறைகள் இன்று கைவிடப்பட்டு, அருகிவரும் நிலைமை தொடர்பிலும் பெரியோர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

குறிப்பாக முன்னோர்கள் இறந்துவிட்டால், அவர்களை எரித்த இடத்தில் காடாத்து செய்யும்வேளையில், அந்த இடுகாட்டில் ஒரு உய்கதிகால் நடுவது வழக்கம். அது தழைத்து அவரின் ஞாபகார்த்தமாக நிற்பதுடன், நிழல்தரு மரமாகவும் இருந்தது.

அது மட்டுமல்ல, இம்மரங்கள் சுற்றுப்புறச் சூழலையும் பாதுகாக்க



செய்திக் கட்டுரை

உதவுகிறது. இன்று அந்த வழக்கம் நடைமுறையில் இல்லாதநிலையிலேயே காணப்படுவதாகச் சுட்டிக் காட்டப்படுகின்றது. இதனைப் போன்றே இன்னும் பல நல்ல அந்திமக் கிரிகை முறைகள் கைவிடப்பட்ட நிலையிலேயே இருக்கின்றன. இவைகள் எல்லாம் மீளவும் கொண்டு வரப்பட வேண்டும் என இங்குள்ள பெரியோர்கள் வலியுறுத்துகின்றனர்.

யாழ்ப்பாணத்தில் பிரசித்திபெற்ற கோம்பயன்மணல் மயானத்தின் இன்றைய நிலையோடு ஒப்பிடும்போது, அன்று - அது இருந்த நிலைமை, பேணப்பட்ட தன்மை சிலாகிக்கப்படவேண்டியதாகும்.

கோம்பயன் மயானம் அப்பொழுது நன்கு பராமரிக்கப்பட்டு வந்ததுடன், இதற்கெனத் தனியே காவலர்களும் இருந்தார்கள்.

அங்கு நிறையவே நிழல்தரும் மரங்கள் இருந்தன. அவைகளின் கீழ் கல்லாசனங்கள் இளைப்பாறுவதற்காக அமைக்கப்பட்டு இருந்தன. மின்சார விளக்கு வசதிகளும் ஒரு சில இடங்களிலேயே இருந்தன.

வெளிநாடுகளில் இன்று சிலர் அமைதிக்காக, இந்தக் கல்லறைத் தோட்டங்களை நாடிச்செல்கின்றனர். அந்தளவுக்கு இன்று உலகமே இந்த இடுகாடுகளைப் புனித பூமியாகவும், அமைதிப் பூங்காவாகவும் பார்த்து நிற்கின்றது.



எனவே, இந்த இடுகாடுகள் பேணிப் பாதுகாக்கப்பட வேண்டியவை. அது மட்டுமல்ல, அவற்றின் புனிதத்தன்மையும் காக்கப்படவேண்டும். எமக்காக வாழ்ந்த எமது முன்

இயே. ஜெயசுதன்




னோர்களும், எமது உறவுகளும் அமைதியாகத் தூங்குகின்ற இந்தப் புனிதப் பிரதேசங்களைக் காக்கின்ற பொறுப்பு எம் அனைவரையும்சாரும்.

இதற்கு உரியவர்கள் மட்டும் நடவடிக்கை எடுத்தால் போதுமானது அல்ல. ஒட்டுமொத்த மக்களின் விழிப்புணர்வு என்பது மிகமிக அவசியமான ஒன்றாக அமைகின்றது. அங்கு துயில்கொள்வது எம்முன்னோர் மட்டுமல்ல.

நாமும் இறுதியில் துயில் கொள்ளவேண்டிய இடமும் அதுதான் என்பதனை ஒருகணம் சிந்திப்போமாயின், அந்த இடுகாடுகள் என்றுமே உயர்ந்த மதிப்பிடங்களாக விளங்கும் என்பது சொல்லாமலேயே புரியும்.


நேற்று கிளிநொச்சிக்கு வந்த நோர்வே வெளிவிவகார அமைச்சர் தலைமையிலான உயர்மட்டக்குழுவினர், இயக்கச்சியில் மனிதநேய கண்ணிவெடியகற்றும் பிரிவினரின் பணிகளை நேரில் பார்வையிடுவதை முதலிரு படங்களிலும், மீட்கப்பட்ட மிதிவெடிகளின் ஒரு பகுதியை மூன்றாவது படத்திலும் காணலாம்.

நோர்வே குழுவினர் தம்மிடையே கலந்துரையாடுவதை முதற்படத்திலும், மிதிவெடியகற்றப்படும் இடத்தில் மீட்கப்பட்ட மிதிவெடியைப் பார்வையிடுவதை இரண்டாவது படத்திலும், கிளிநொச்சியில் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் நடுவப்பணியகத்தை நோர்வேக் குழுவினர் பார்வையிடுவதை மூன்றாவது படத்திலும் காணலாம்.

## நிர்வாகிகள் தெரிவுக் கூட்டம்

வலிகாமம் தென்மேற்குப் பிரதேச சபைக்குட்பட்ட சனசமூக நிலையங்களுக்கிடையிலான புதிய சமாச நிர்வாகிகளைத் தெரிவு செய்வதற்கான கூட்டம், இன்று காலை 10 மணிக்கு பிரதேசசபை கலாசார மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இக்கூட்டத்தில் - உள்ளூராட்சி வாரம் சம்பந்தமான விடயங்கள் ஆராயப்படுவதுடன், மரங்கள் வழங்குவதற்கான கடிதங்களும் வழங்கப்படும். அத்துடன், இக்கூட்டத்துக்குச் சமுகமளிக்காத சனசமூக நிலையங்களுக்கு, 2003 ஆம் ஆண்டுக்கான நன்கொடை நிதி வழங்கப்பட மாட்டாது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (100)

# முதல் ஹோமியோபதி மருத்துவமனை வெலிசறையில் திறந்துவைக்கப்பட்டது

## இந்திய வைத்தியசாலையின் உதவி கிடைக்கும்

(கொழும்பு)

இலங்கையின் முதலாவது ஹோமியோபதி மருத்துவமனை, வெலிசறையில் சுகாதார அமைச்சர் பி.தயாரட்ணவினால் திறந்து வைக்கப்பட்டது.

20 படுக்கை வசதிகளைக் கொண்ட இந்த ஹோமியோபதி மருத்துவமனை - வாரத்தில் சனி, ஞாயிறு தவிர்ந்த ஏனைய நாட்களில், 9 மணி முதல் பி.ப 3.30 மணிவரை திறந்திருக்கும்.

இந்த மருத்துவமனைக்குத் தினமும் 80 நோயாளர்கள் சிகிச்சைக்காக வருவதாகத் தெரியவருகிறது.

மூட்டுவாதம், ஆஸ்மா, தோல் வியாதிகள், வாயு சம்பந்தப்பட்ட நோய்களுக்குச் சிகிச்சை பெறவே அதிகமானோர் இந்த மருத்துவமனையை நாடுகின்றனர்.

அம்பாறை, அனுராதபுரம் போன்ற பகுதிகளிலிருந்தும் நோயாளர்கள் வெலிசறைக்கு வரத் தொடங்கியுள்ளதாகத் தெரியவருகிறது.

இதேவேளை - வெலிசறையிலுள்ள வைத்தியசாலையை மேலும் நவீனமயப்படுத்துவதற்கு, புதுடெல்கியிலுள்ள ஹோமியோபதி வைத்தியசாலையின் உதவி பெறப்படவுள்ளது.

புதுடெல்கி நேரு ஹோமியோபதி வைத்தியசாலையில், சத்திர சிகிச்சைகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இந்தியத் தூதரகம் ஊடாக இந்த வைத்தியசாலையின் உதவியைப் பெறவும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது.

அத்துடன் - இந்தியாவில் ஹோமியோபதி மருத்துவ மாணவர்களுக்கான கல்வி வசதிகளை உருவாக்கிக்கொடுக்கவும், நேரு ஹோமியோபதி வைத்தியசாலையுடன் வெலிசறை வைத்தியசாலையை இணைத்துச் செயற்பட வைக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது.

## கட்டுநாயக்க விமான நிலையத்தில்

# சர்வதேச தரத்திலான எரிபொருள் நிரப்ப வசதி

சர்வதேச ரீதியில், விமான நிலையங்களில் இருப்பது போன்ற எரிபொருள் நிரப்பு வசதி - கட்டுநாயகக விமான நிலையத்திலும் செய்யப்பட்டுவருகிறது.

இதற்கமைய, கட்டுநாயக்க விமான நிலையத்தில் 'ஏ' தரத்திலான நவீன எரிபொருள் நிரப்பு வசதிகள் உருவாக்கப்பட்டு வருகின்றன.

இந்தத் தொகுதியை அமைக்க 900 மில்லியன் ரூபா செலவிடப்பட்டுள்ளது.

கட்டுநாயகக விமானநிலையத்தில் - 3 நாட்களுக்குத் தேவையான எரிபொருளை மட்டுமே சேமித்து வைக்கக்கூடிய வசதிகள் இதுவரை காலமும் இருந்தன.

இப்புதிய தொகுதி களஞ்சிய வசதிகள் ஏற்படுத்தப்பட்டதும் 9 நாட்களுக்குத் தேவையான எரிபொருளைச் சேமித்துவைக்க முடியும் என விமான நிலைய அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

புதிதாக மூன்று எரிபொருள் குதங்கள் அமைக்கப்பட்டதும், விமானங்களுக்கு துரிதமாக எரிபொருளை வழங்கக் கூடியதாக இருக்கும் என்றும் அவர் தெரிவித்தார்.

# முள்ளியான் உபதபாலகம் மீளத் திறந்துவைக்கப்பட்டது!

மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் பிரிவிலுள்ள முள்ளியான் உப தபாலகம், கடந்த திங்கட்கிழமை வைபவரீதியாகத் திறந்து வைக்கப்பட்டது.

2001 ஆம் ஆண்டு நடைபெற்ற யுத்த அனர்த்தங்களால் தாளையடியிலும் பின் மருதங்கேணியிலும் இயங்கிவந்த உப தபாலகம், பின்னர் இயங்கமுடியாத நிலையில் இருந்துவந்தது.

2002 ஆம் ஆண்டு மீள்குடியேற்றம் நடந்தபின், மக்கள் தங்கள் தேவைகளைப் பூர்த்திசெய்ய முடியாத நிலையில் தாளையடி தபாலகத்திற்கு வந்தே தங்களது தேவைகளை நிறைவேற்றினர்.

7 அல்லது 8 மைல்கள் தொலைவிலிருந்து வரவேண்டி இருந்ததால், இவர்கள் பெரும் கஷ்டத்தை அனுபவித்து வந்தார்கள். இம் மீளக குடியமர்ந்த மக்களின் கோரிக்கையையடுத்தே இந்த உப தபாலகம் மீண்டும் திறக்கப்பட்டது. (17)

## ஜி.ரி.இசற். நிறுவன உதவியுடன்

# போக்கறுப்பு கிராமத்தில் 67 வீடுகள் அமைக்கப்படும்

(வடமராட்சி கிழக்கு)

மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் பிரிவிலுள்ள, போக்கறுப்பு கிராம சேவகர் பிரிவில் - 67 வீடுகளை கட்டிக்கொடுப்பதற்கு ஜீ.ரி. இசற் நிறுவனம் முன்வந்துள்ளது.

போக்கறுப்பு, கேவில், வண்ணாங்குளம் ஆகிய கிராமங்களில் மீளக் குடியமர்ந்த மக்களுக்கே வீடுகள் கட்டிக்கொடுக்கப்படவுள்ளன. இதற்கான பயனாளிகளைத் தெரிவு செய்வதற்கான கூட்டம், எதிர்வரும் 19 ஆம் திகதி திங்கட்கிழமை மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் வி.ப.வேலாயுதபிள்ளை தலைமையில், போக்கறுப்பு கிராமசேவ அலுவலர் காரியாலயத்தில் நடைபெறவுள்ளது.

இக்கூட்டத்தில், ஜி.ரி.இசற் நிறுவன உயர் அதிகாரிகள் கலந்து கொள்வர் என அறிவிக்கப்பட்டுள்ளது. (17)

# வழுக்கியாறு வாய்க்கால் புனரமைக்க கோரிக்கை

சங்குவேலி, அந்திரான் போன்ற இடங்களில் ஏற்படும் வெள்ளப் பெருககுகளைத் தடுப்பதற்கு, வழுக்கியாறு வாய்க்காலை உடனடியாகப் புனரமைத்துத் தருமாறு, சங்குவேலிப் பகுதி கிராம சேவையாளர் - வலிகாமம் தெற்கு பிரதேச செயலாளரிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

வழுக்கியாறு வாய்க்கால் - திருத்தம் செய்யப்படாமையால், சங்குவேலி, அந்திரான் போன்ற இடங்களில் மழைகாலங்களில் வெள்ளம் வீதிகளில் தேங்கி நிற்கின்றது.

இப்பகுதிகளிலிருந்து வெள்ளம் வழிந்தோடுவதற்காக, மக்கள் வீதிகளைக் குறுக்கே வெட்டிவிடுவதாகவும், இதனால் - போக்குவரத்துக்கு இடையூறு ஏற்படுவதாகவும் கிராம சேவையாளர் ஜெபரத்தினம் தனது கோரிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

# சிறு செய்திகள்

## வெற்றிலைக் கொடிகள் விஷமிகளால் அழிப்பு

இளவாலைப் பகுதியிலுள்ள தோட்டமொன்றில் - 1500 வெற்றிலைக் கொடிகள் விஷமிகளால் அழிக்கப்பட்டுள்ளன.

இதனால், தோட்ட உரிமையாளருக்கு சுமார் நாற்பதாயிரம் ரூபா நட்டம் ஏற்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது. (72)

## ஆரம்ப கணித மாநாடு

தேசியக் கல்வி நிறுவகத்தின் ஆரம்ப கணித அலகும், யாழ்ப்பாண கல்வி வலயமும் இணைந்து நடாத்தும் ஆரம்ப கணித மாநாடு, கோப்பாய் ஆசிரியர் கலாசாலையில் இன்று காலை 8.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

## பணிமனை திறப்பு விழா

தமிழீழ கல்வி மேம்பாட்டுப் பேரவையின் யாழ்.மாவட்டப் பணிமனை, இன்று காலை 10 மணிக்கு யாழ். வலயக் கல்விப் பணிமனையில் திறந்து வைக்கப்படவுள்ளது.

## மாடுகள் பிடிபட்டன

(பருத்தித்துறை)

இறைச்சிக்கென, களவாகக் கொண்டுவரப்பட்ட 5 மாடுகளை, பருத்தித்துறை பொலிஸார் மீட்டனர்.

வன்னிப் பகுதியிலிருந்து கொண்டுவரப்பட்டதாகக் கருதப்படும் ஐந்து மாடுகளும், அவற்றை ஏற்றிவந்த லான்ட்மாஸ்ரரும் பருத்தித்துறைப் பொலிஸாரின் திடீர் சோதனையின்போது கண்டுபிடிக்கப்பட்டு, பருத்தித்துறைப் பொலிஸ் நிலையத்துக்கு கொண்டு செல்லப்பட்டன. (15)

## விண்ணப்ப முடிவு திகதி நீடிப்பு

(யாழ்ப்பாணம்)

மக்கள் வங்கியில் 'சிசு உதான' கணக்கு வைத்திருக்கும் மாணவர்களுக்குக்கிடையே, கல்வி அமைச்சின் ஒத்துழைப்புடன் நடத்தப்படவிருக்கும் பொது அறிவுப் போட்டிக்கான விண்ணப்ப முடிவு திகதி நீடிக்கப்பட்டுள்ளதாக, வங்கியின் வடபிராந்திய முகாமையாளர் மு.க. சிவபாதவிருதயர் அறிவித்துள்ளார்.

இப்பரீட்சைக்கான விண்ணப்பங்களை, இம்மாதம் 30 ஆம் திகதி வரை அனுப்பி வைக்கலாமெனவும், மேலதிக விபரம் தேவையாயின் அருகிலுள்ள மக்கள் வங்கிக் கிளையை நாடும்படியும் அவர் மேலும் கேட்டுள்ளார். (100)

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland




# அதிகார கட்டமைப்பு ஏதுமில்லாது...

யாடப்பட்டன.

குறிப்பாக - யுத்தநிறுத்த உடன்பாடு ஏற்படுத்தப்பட்டு ஒரு வருடத்திற்கு மேலாகிவிட்டது, இதுவரை பொதுமக்களது வாழ்க்கை நிலையில் இயல்புநிலை ஏற்படுத்தப்படவில்லை, மக்களுக்கான அவசர மனிதாபிமான, புனர்வாழ்வு நடவடிக்கை எதுவும் மேற்கொள்ளப்படவில்லை. நீண்டகாலமாக வடக்கு - கிழக்குப் பிரதேசத்தின் அடிக்கட்டுமானம் சிதைந்துபோயுள்ளது.

இந்த நிலையில், எந்தவித வேலைத்திட்டங்களும் நிறைவேற்றப்படாமல் இருப்பதுபற்றி நோர்வேத் தூதுக்குழுவுக்கு தெரிவிக்கப்பட்டது. யுத்தநிறுத்த உடன்பாடு வந்தபின் நடைபெற்ற ஆறு சுற்றுப் பேச்சுவார்த்தைகளில் இணக்கம் காணப்பட்ட விடயங்கள் எதுவும் நடைமுறைப்படுத்தப்படாதமை, மக்கள் மத்தியில் நம்பிக்கையீனத்தை ஏற்படுத்தியிருப்பதாக நோர்வேத் தூதுக்குழுவிடம் தலைவர் விரிவாக எடுத்துக் கூறினார்.

*கேள்வி:-* சிறான் அமைப்பும் அதன் திட்டங்கள் பற்றியும் ஏதாவது பேசப்பட்டதா?

*பதில்:* கடந்த ஆறு மாதங்கள் கடந்தும் இந்த அமைப்பு சரியாகச் செயற்படவில்லை. அரசதரப்பு ஒத்துழைப்பின்மையும், அவர்கள் போட்ட முட்டுக்கட்டை காரணமாகவும் சிறான செயற்பட முடியாமற்போனது. உலகவங்கியின் கீழ் செயற்பட இருந்த, வடக்கு - கிழக்கு புனர்வாழ்வு நிதியம் செயற்படாதுபோனது பற்றியும், நோர்வே வெளிவிவகார அமைச்சின் தூதுக் குழுவினருக்குத் தலைவர் தெளிவாக விளக்கினார்.

*கேள்வி:* தேசியத் தலைவர் அவ்வாறு விளக்கியபோது நோர்வேத் தரப்பில் என்ன பிரதிபலிப்பு இருந்தது?

*பதில்:* அவர்கள் அதை ஏற்றுக் கொண்டனர். ஒரு வருடத்திற்கு மேலாகியும் மக்களுடைய பிரச்சினை தீர்க்கப்படவில்லை. மக்கள் இயல்பு வாழ்க்கைக்கு வரவில்லை என்பதையும், எவ்வித புனர்வாழ்வு - புனரமைப்பு நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படவில்லை என்பதையும், நோர்வேக் குழுவினரிடம் தெரிவித்த போது அவர்கள் அதனை ஏற்றுக் கொண்டார்கள்.

*கேள்வி:* நோர்வே இத்தகைய நடவடிக்கைகளில் தொடர்ந்து ஈடுபட இருப்பதாகத் தெரிவித்துள்ளதா?

*பதில்:* தாங்கள் அரச தரப்புடன் பேசி, ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை எடுப்பதாகத் தெரிவித்துள்ளனர்.

*கேள்வி:* ரோக்கியோ உதவி வழங்கும் மாநாட்டில் கலந்து கொள்வது பற்றி இச்சந்திப்பின்போது ஏதாவது பேசப்பட்டதா?

*பதில்:* மாநாட்டில் கலந்து கொள்ளுமாறு நோர்வே தரப்பிலிருந்து விடுதலைப் புலிகளுக்கு வேண்டுகோள் விடுக்கப்பட்டது. சர்வதேச சமூகத்திடம் நாம் உதவி கோரிப் போகும்போது, இங்கே நிர்வாக அதிகாரமுள்ள ஒரு கட்டமைப்பை நிறுவாமல், அதற்கான அதிகாரங்களைப் பெற்றுக் கொள்ளாமல், நாங்கள் இந்த மாநாட்டில் கலந்துகொள்வது பிரயோசன மற்றதொன்று என்று, அவர்களிடம் தெளிவுபடுத்தினோம்.எமது தாயகப் பிரதேசத்திலே கூடிய அதிகாரங்கள் கொண்ட ஒரு கட்டமைப்பு இல்லாத போது, நாங்கள் சர்வதேச சமூகத்தில் இவ்வாறு உதவி கோருவதில் எவ்வித பிரயோசனமும் இல்லை என்பதை சர்வதேச சமூகமும் கூட ஏற்றுக்கொள்ளும்.

அதேவேளை, இலங்கை அரசாங்கத்திற்கு நிதி சேகரித்துக் கொடுப்பது எங்களது வேலையல்ல.

நாங்கள் - உதவி வழங்கும் மாநாட்டில் கலந்து கொள்வதாயின், எமது மக்களுக்கு நன்மையளிக்கக்கூடியதாகவும், பிரயோசனமளிக்கக்கூடியதாகவும் இருக்கக்கூடிய உறுதிப்பாடு எமக்குத் தேவையென நோர்வேத் தூதுக்குழுவிடம் கேட்டுக்கொண்டோம்.

*கேள்வி:* ரோக்கியோ உதவி வழங்கும் மாநாட்டை பிற்போடச் சொல்லிக் கேட்கப்பட்டதா?

*பதில்:* ரோக்கியோ உதவி வழங்கும் மாநாட்டை பிற்போடுமாறு கேட்கவேண்டிய அவசியம் இல்லை. ஏனென்றால், நாங்கள் கலந்துகொள்வதாயின், அரச தரப்பிடமிருந்து பல இணக்கப்பாடுகளையும் உறுதிப்பாடுகளையும் எடுக்கவேண்டியுள்ளது. சர்வதேச சமூகம் தருகின்ற உதவியை, வடக்கு - கிழக்கு மக்களுக்குச் சென்றடைய சாத்தியப்பாடானதும், உறுதிப்பாடானதுமான ஓர் ஏற்பாடு இருக்கவேண்டியது அவசியம். அப்படியான ஓர் ஏற்பாட்டை ஏற்படுத்திக்கொண்டு, சர்வதேச சமூகத்திடம் நாங்கள் இரண்டுதரப்பும் இணைந்து போகலாமே தவிர, இன்றைய சூழலில் நாம் கலந்துகொள்வது சாத்தியமில்லை. எனவே, ஜப்பானில் நடைபெறும் மாநாட்டினைப் பிற்போடக்கோரி அரசு ஏதாவது நிலைப்பாடு எடுக்கலாமே தவிர, நாங்கள் எதையும் கோரப்போவதில்லை.

*கேள்வி:* நீங்கள் குறிப்பிட்ட மாதிரி - நிதி, நிர்வாக ரீதியான அதிகார அலகினை அமைக்க இலங்கை அரசாங்கம் ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை எடுக்குமென நம்புகிறீர்களா?

*பதில்:* இன்றைய சந்திப்பில், நோர்வே வெளிவிவகார அமைச்சரும் அவருடைய குழுவினரும் இது தொடர்பாக முயற்சிகள் மேற்கொள்வதாகவும், தாம் இலங்கை அரசாங்கத்திடம் இது சம்பந்தமாக உடனடியாகப் பேசி, இவ்விடயம் தொடர்பாக சாத்தியப்பாடான ஒரு நிலையைத் தாம் கொண்டுவருவதாகவும் தெரிவித்துள்ளனர்.

*கேள்வி:* சிறான் அமைப்பின் பதினைந்து திட்டங்களில், பன்னிரண்டினை தங்களது இயல்பான நிதி நடவடிக்கைகளின் ஊடாக செய்யப் போவதாக அரசு கூறியிருக்கிறது. அப்படியாயின், சிறானின் செயற்பாடுகள் எவ்வாறு இருக்கப்போகின்றது?

*பதில்:* இவ்வாறு தெரிவு செய்யப்பட்ட திட்டங்களை, அரசாங்கம் ரோக்கியோ மாநாட்டிற்கு கொண்டு செல்வதற்காக, இப்படி ஒரு தலைப் பட்சமாக செய்ய முயல்கின்றது.

சிறான் அமைப்பிற்கு எந்தவித அதிகாரமும் இல்லாத நிலையில், எமது மக்களின் தேவையினை நிறைவு செய்யமுடியாத நிலையில், நாம் இந்த அமைப்பினை நம்பி பேச்சுவார்த்தைகளில் ஈடுபடமுடியாது என்பதே எமது நிலைப்பாடு.

*கேள்வி:* அமெரிக்க பிரதி இராஜாங்க அமைச்சர் கிறிஸ்ரினா ரொக்கா, விடுதலைப் புலிகள் கட்டாயம் பேச்சுக்களில் பங்குபற்ற வேண்டுமெனக் கூறியிருக்கின்றார். அது பற்றி?

*பதில்:* அமெரிக்கப் பிரதி இராஜாங்க அமைச்சர் ஒரு வேண்டுகோளைத்தான் விடுத்திருக்கின்றாரே தவிர, கட்டாயமாக நாம் செல்லவேண்டுமெனத் தெரிவிக்கவில்லை.

இன்று அமெரிக்கா மட்டுமல்ல, சர்வதேச சமூகம் முழுவதும் இங்குள்ள சமாதான சூழ்நிலைகளையும் முன்னெடுப்புக்களையும் வெற்றிகரமாக முன்கொண்டு செல்வதற்கு, தமது ஆலோசனைகளைத் தெரிவித்துக் கொண்டிருக்கிறது. இங்குள்ள உண்மையான பிரச்சினையை அவர்கள் அறிகின்றபோது, சர்வதேச சமூகம் எங்களது வேண்டுகோளை மறுபரிசீலனை செய்யும்

அதாவது, எமது வடக்கு - கிழக்கு மக்களுக்குப் பயன்தரும் வகையில், ஆக்கபூர்வமான வகையில் பெறப்படும் நிதியை எங்களால் பயன்படுத்தமுடியுமாயின் நாம் கலந்துகொள்ளலாம். இதுதான் யதார்த்தம்.

ஆகவே, அப்படியான சூழ்நிலையை உருவாக்கிக் கொள்வதற்காகவே, எங்களுடைய தலைமை இயல்பான ஒரு நிலைப்பாட்டினை எடுத்திருக்கின்றது. இதுபற்றிய விரிவான விளக்கத்தினை அண்மையில் ஜப்பானிய விசேட தூதுவர் யசுசி அகாஷி அவர்களுக்கு, எமது தேசியத் தலைவர் தெளிவாக விளக்கியிருந்தார்.

இன்று, நோர்வே வெளிவிவகார அமைச்சரை சந்தித்தபோதும், எமது தலைவர் எமது நிலைப்பாட்டினை தெளிவுபடுத்தியிருக்கின்றார்.

உதவி வழங்கும் மாநாட்டினை புலிகள் புறக்கணிப்பது, விடுதலைப் புலிகளின் தனிப்பட்ட முடிவல்ல. எமது தலைவர் இந்த முடிவை எடுத்தற்குக் காரணம், சர்வதேச உதவிகள் எமது மக்களுக்கு கிடைககவேண்டும் என்பதற்காகவே ஆகும்.

*கேள்வி:* தற்பொழுது ஏற்பட்டுள்ள இந்தச் சூழ்நிலை, சமாதான முயற்சிகளைப் பாதிக்கும் என நினைககிறீர்களா?

*பதில்:* தற்போது ஏற்பட்டுள்ள சூழ்நிலை, கட்டாயம் சமாதான முயற்சியை உறுதியாக முன்னெடுத்துச் செல்வதற்கான நிலையைத் தோற்றுவிப்பதற்கான நிலைப்பாடே. ஆகவே, இது சம்பந்தமாக அரசாங்கம் தனது தீவிர கவனத்தினைச் செலுத்தி, சமாதான முயற்சிகளை முன்னெடுக்கும் சூழ்நிலையை ஏற்படுத்துவது அவர்களின் கைகளிலேயே தங்கியிருக்கின்றது.

*கேள்வி:-* தென்னிலங்கையில் அரசாங்கத்துக்கும் ஜனாதிபதிக்கும் இடையில் ஏற்பட்டுள்ள முறுகல் நிலை, சமாதான முயற்சிகளைப் பாதிக்குமா?

*பதில்:-* தென்னிலங்கையில் புதிதாக வந்த பிரச்சினையாக நாம் இதனைக் கருதவில்லை. தென்னிலங்கையில் அவ்வப்போது காலத்துக்குக்காலம் சந்திரிகா அம்மையார் இவ்வாறான தாக்குதல்களைச் செய்துகொண்டுதான் இருக்கிறார். அதேவேளை, தென்னிலங்கையில் உள்ள அரசியற் பிரச்சினைகள் பற்றி நாங்கள் கருத்துக்கள் சொல்ல முடியாது. அதைத் தீர்த்துக் கொள்ளவேண்டியது, சந்திரிகா அம்மையாரும் ரணில் விக்கிரமசிங்கவும்தான்.

*கேள்வி:-* சமாதானப் பேச்சுக்களின் எதிர்காலம் எவ்வாறு அமையப் போகிறது?

*பதில்:-* இதுவரை நடந்த சமாதான முன்னெடுப்புக்கள் தொடர்பாக, அதில் ஏற்படுத்தப்பட்ட இணக்கப்பாடுகள் பற்றியும், இங்கு நடைமுறைப்படுத்தப்படாத விடயங்கள் பற்றி - எமது மக்களது நிலைப்பாடு தொடர்பாகவும், சமாதான முன்னெடுப்புத் தொடங்கிய காலத்திலிருந்து எமது மக்களிடம் இருந்த பெரிய எதிர்பார்ப்பு எதுவும் நிறைவேற்றப்படாத சூழ்நிலை பற்றியும், இதனால் மக்களிடம் ஏற்பட்ட ஏமாற்றத்தினைப் பற்றியும் எமது தலைவர் விரிவாக எடுத்துக் கூறியுள்ளார்.

இதனைத் தெளிவாக விளங்கிக் கொண்ட நோர்வே குழுவினர் - தாம் பிரதமருடனும், அரசுடனும் பேசி, எமது கருத்துக்களை அவர்கள் மத்தியில் முன்வைக்கப்போவதாகத் தெரிவித்தனர்.

அரசாங்கம், இந்தக் கருத்துக்களின் அடிப்படையில் - தீர்மானங்களை, முடிவுகளை எடுத்து, எத்தகைய ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை முன்னெடுக்கின்றதோ, அதன் அடிப்படையில்தான் அனைத்து எதிர்காலமும் தங்கியிருக்கிறது.

*கேள்வி:-* நீங்கள் கோருகிற மாதிரி அதிகாரமுள்ள அலகினை அரசாங்கம் தருமாயின், நீங்கள் பேச்சுக்களுக்கு மீண்டும் செல்வீர்களா?

*பதில்:-* நிச்சயமாகச் செல்வோம்.

*கேள்வி:-* நம்பியாரது அறிக்கை உங்களுக்குக் கிடைக்கவில்லையா?

*பதில்:-* நம்பியாரிடம் அறிக்கை கேட்டது இலங்கை அரசாங்கம். ஆகவே, நம்பியாரிடம் பெற்ற ஆலோசனைகள் எவ்வாறானது என்பதனை நாங்கள் சொல்லத்தேவையில்லை. எமது மக்களே அதற்குத் தகுந்த பதில் அளிப்பார்கள்.

அதாவது, தங்களது சொந்த இருப்பிடங்களில் எமது மக்கள் போய் இருப்பதற்கு, வேறுவேறு ஆலோசனைகளையும் கருத்துக்களையும் கேட்டுக் கொண்டிருக்க முடியாது. இது எங்களுடைய சொந்தப் பிரச்சினை. எங்களது உரிமை. அதைத்தான் அவர்கள் கேட்கிறார்கள். எனவே, நிலங்களை ஆக்கிரமித்து நிற்பவர்கள் அதைவிட்டு விலகி, எங்களது மக்களைக் குடியேற்ற வேண்டும். அதற்கு யாரும் ஆலோசனை சொல்லத் தேவையில்லை என்றுதான் நான் நினைக்கிறேன்.

# குமுதினி படகு படுகொலை நினைவுநாள் அனுஷ்டிப்பு

(நெடுந்தீவு)

குமுதினிப் படகு படுகொலை நினைவு நிகழ்வுகள், நேற்று நெடுந்தீவில் மிகவும் உணர்வுபூர்வமாக அனுஷ்டிக்கப்பட்டன. நெடுந்தீவில் நேற்று வர்த்தக நிலையங்கள் மூடப்பட்டு, பயணிகள் போக்குவரத்துச் சேவை நிறுத்தப்பட்டு, ஹர்த்தால் முழுமையாக அனுஷ்டிக்கப்பட்டது. வீதியெங்கும், இரு மருங்கிலும் கறுப்புக் கொடிகள் கட்டப்பட்டிருந்தன.

குமுதினிப் படகில் கொலையுண்டவர்கள் நினைவாக அமைக்கப்பட்ட நினைவுத்தூபி அருகே காலை 9 மணிக்கு நினைவு நிகழ்வுகள் நடைபெற்றன. முன்னதாக, சீக்கிரியாம்பன்ன சந்தியிலிருந்து பெருமளவு மக்கள் கலந்துகொண்ட, கண்டன மௌனப் பேரணி ஆரம்பமானது. மூன்று கிலோமீற்றர் நீளமான பேரணி, மாவிலித் துறைமுகத்தை அடைந்ததும், அங்கு கடலில் பிரத்தியேகமாக அமைக்கப்பட்டிருந்த மிதப்பு ஈகச்சுடரை, படுகொலையான ஒருவரின் தந்தையார் ஏற்றிவைத்தார். துறைமுகத்தில் அமைக்கப்பட்ட பொதுச்சுடரை, படுகொலையான 8 மாதக் குழந்தையின் தாயாரும் சம்பவத்தில் காயமுற்றவருமான வி.அன்னலட்சுமி ஏற்றிவைத்தார்.

படுகொலை செய்யப்பட்ட 36 பேரின் நினைவாக அமைக்கப்பட்ட தூபிக்கு, மலர் மாலைகள் அணிவிக்கப்பட்டன. இறந்தோரின் உறவினர் மலரஞ்சலி செலுத்தினர். இதன் போது, பலியான தமது உறவுகளின் உருவப்படங்களை பார்த்து அவர்கள் கண்ணீர்விட்டுக் கதறிய காட்சி அங்கு நின்றவர்களை நெகிழச்செய்தது.

தொடர்ந்து, தீவக மக்கள் நலன் காப்பக நெடுந்தீவு பிரதேச தலைவர் கனகலிங்கம் தலைமையில் - யாழ். அரசியற்துறை துணைப் பொறுப்பாளர் செம்மணன், நெடுந்தீவு அரசியற்துறைப் பொறுப்பாளர் கண்ணன், மதகுருமார்கள், கூட்டுறவாளர்கள் ஆகியோர் உரையாற்றினர். நேற்றைய நிகழ்வில் ஏராளமான மக்கள் கலந்துகொண்டனர். (113)

## சொந்த இடங்களுக்கு வழக்கு மாற்றப்படாது

(கொழும்பு)

களுத்துறைச் சிறையிலுள்ள தமிழ்க் கைதிகளில், 65 பேரின் வழக்கு விசாரணைகள், கொழும்பிலேயே நடைபெறும் என சட்டமா அதிபர் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இவர்களது வழக்குகளை, அவர்களது சொந்தப் பிரதேசத்துக்கு மாற்றுவதான எந்தத் திட்டமும் இல்லை என அந்த வட்டாரங்கள் கூறின.

களுத்துறைத் தமிழ்க் கைதிகள் தமது வழக்குகளை, தமது சொந்த இடத்துக்கு மாற்றவேண்டும் மற்றும் விசாரணைகளைத் துரிதப்படுத்த வேண்டும் போன்ற கோரிக்கைகளை முன்வைத்து உண்ணாவிரதப் போராட்டம் நடத்திவருவது குறிப்பிடத்தக்கது.

இதனிடையே, இரண்டாவது நாளாகவும் நேற்று உண்ணாவிரதப் போராட்டத்தை தொடரும் தமிழ்க் கைதிகள் மூவருக்கும் ஆதரவாக மேலும் சில தமிழ்க் கைதிகள் சுழற்சிமுறை உண்ணாவிரதத்தில் குதிக்கத் திட்டமிட்டுள்ளனர். (01)

# 'விடுதலைப் புலிகள்' நாளை வெளிவருகிறது

(கிளிநொச்சி)

விடுதலைப் புலிகளின் அதிகாரபூர்வ ஏடான 'விடுதலைப் புலிகள்' நாளை வெளிவருகிறது.

முக்கியமான அரசியல் விடயங்களை இந்த ஏடு தாங்கி வருகிறது.

'அரசின் செயல் விருப்பின்மை, பேச்சை மோசமாகப் பாதிக்கும்' என்ற முகப்புச் செய்தியுடன், 'வொஷிங்ரன் மாநாட்டில் விடுதலைப் புலிகள் புறக்கணிக்கப்பட்டமை, பேச்சுவார்த்தையில் ஒரு பாரபட்சம்' என்ற ஆசிரிய தலையங்கத்துடனும், இந்த இதழ் வெளிவருகின்றது.

இத்துடன், பல்வேறு அரசியல், சமூக, பொருளாதாரக் கட்டுரைகளும் ஆக்கங்கள் பலவும் இந்த இதழில் இடம்பெறுகின்றன.

SPECIAL ENGLISH

★ விசேட ஆங்கில மொழி கற்கைநெறி
★ பாடசாலை விலகியோர், O/L, A/L பரீட்சை முடித்தோர், உயர்கல்வி மாணவர், தொழிலில் ஈடுபட்டோருக்குரியது.
★ ஆரம்ப நிலையிலிருந்து மொழியின் சகல பரப்புகளையும் கொண்ட பாடத்திட்டம்

ஆரம்பம்: 17.05.2003

சனி, ஞாயிறு காலை, மாலை வகுப்புக்கள்
★ பிரிவு I காலை :- 10-12 வரை
பிரிவு II பிற்பகல் :- 2.30 - 4.30 வரை
ஆசிரியர் :- த.ந.பஞ்சாட்சரம்
மேலதிக விபரங்களுக்கு

நிர்வாகி

NEW SCIENCE HALL
KANNATHIDDI, JAFFNA

(சி-935)

## 'சார்ஸ்'....

எப்படி நடந்துகொள்வது, பராமரிப்பது பற்றி - யாழ்.மருத்துவ அதிகாரிகளுக்கு ஆலோசனை வழங்கியிருக்கிறோம் என அவர் மேலும் தெரிவித்தார்.

இது தொடர்பாக, உலக சுகாதார ஸ்தாபன விசேட அதிகாரியான டாக்டர் சிவராசா கருத்துத் தெரிவிக்கையில் -

நாங்கள் ஆரம்பத்தில் 'சார்ஸ்' நோய் என்றுதான் இருந்தோம். இப்போது பார்க்கும்போது, அது 'சார்ஸ்' நோய் அல்ல. இருந்தாலும், சந்தேகத்துக்கிடமான முறையில் மரணமானவரின் உறவினர்களை அடுத்த 15 நாட்களுக்கு அவதானிக்க இருக்கிறோம். 20 நாட்களுக்குள் இவர்களுக்கு 'சார்ஸ்' நோய்த் தாக்கம் இல்லையென்பது உறுதியானால், இறந்தவருக்கு ஏற்பட்டது 'சார்ஸ்' நோய் அல்ல என்பதைத் தெளிவாகக் கூறமுடியும் என்றார் அவர். (சு)

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 16.05.2003 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.